பக்கங்கள்: 11

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 30 புதன்கிழமை 16.10.2024 கதிர் 343

## இது ரகசியம் அல்ல!

ஜனாதிபதித் தேர்தல் செலவு அறிக்கையைவழங்காததால்தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பின் வேட்பாளர் அரியநேத்திரனுக்கு சிக்கல்வரும்என்று நேற்றுத் ☞ 2

## வடக்கின் அடித்தட்டு மக்களுக்கு அதிகாரப் பகிர்வு அவசியமற்றது

### ஜே.வி.பி. செயலாளர் ரில்வின் சில்வா திட்டவட்டம்

தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வுவழங்காதவடக்கின்தமிழ்அரசியல்தலைவர்கள், தமதுஅதிகாரத்தைதக்கவைத்துக்கொள்ளவதற்காகவே அரசமைப்பின் 13ஆவது திருத்தம் மற்றும் அதிகாரப்பகிர்வு போன்ற வசனங்களைப் பயன்படுத்திக்கொண்டனர். வடக்கின் அடித்தட்டு மக்களுக்கு13ஆவதுதிருத்தச்சட்டம்அவசியமில்லை. அவர்களுக்கு அதிகாரப் பகிர்வு அவசியம் இல்லை. அவர்களுக்குவிசாயத்தைமேற்கொள்ளநீர்வசதிகளும், அவற்றை சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்புகளும், கல்வியும், நல்லவைத்தியசாலைகளுமேஅவசியமாக உள்ளன என்று ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

தனியார் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கில் பல்வேறு முரண்பாடுகள் உள்ளன. மொழி ரீதியான பிரச்சினை அங்கு உள்ளது. அரச அலுவலகங்கள்மற்றும்நிறுவனங்களில்தாம்விரும்பும் மொழியில் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியாதுள்ளது. கொழும்பைமையப்படுத்தியுள்ள சில வசதி, வாய்ப்புகள் வடக்குக்குச் செல்வதில்லை. ☞ 2

## உதய கம்பன்பிலவுக்கு 3 நாள் கால அவகாசம்

### அமைச்சர் விஜித ஹேரத் வழங்கினார்

உயிர்த்தஞாயிறுகுண்டுத்தாக்குதல்கள் தொடர்பாகத் தன்னிடமுள்ள விசாரணை அறிக்கையைவெளியிடுவதற்கு, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பிலவுக்குமூன்றுநாள்கள்அவகாசம் வழங்குகிறார் என்று அயலுறவுத்துறை அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பில் தேசிய மக்கள் சக்தி ஆட்சியாளர்களிடம் வழங்கப்பட்ட 2 அறிக்கைகளையும் ஒரு வார காலத்திற்குள் வெளியிடவேண்டும் இல்லையேல் அவற்றை நான் வெளியிடுவேன் என்று உதய கம்பன்பில தெரிவித்திருந்தார். அண்மையில் செய்தியாளர்களிடம் பேசியபோது அவர் இத னைத் தெரிவித்திருந்தார். ஐ.எம். இமாம் மற்றும் ஏ.என்.ஜே.டி. அல்விஸ் அறிக்கைகளே இதுவரை வெளியிடப்படவில்லை என்றும் அவற்றை இந்த ஆளும்தரப்பு ஒருவாரத்திற்குள் வெளியிடவேண்டும் என்றும் கூறி கோரியிருந்தார்.

அரசுஅவற்றைவெளியிடத்தவறினால், தாம் அவற்றைப் பகிரங்கப்படுத்துவார் என்றும்தெரிவித்திருந்தார். இந்தநிலையில், நேற்றைய அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும்செய்தியாளர்சந்திப்பில்இதற்குப் பதிலளித்த அமைச்சர் விஜித ஹேரத், ஏப்ரல் 21 தாக்குதல்கள் தொடர்பில் ஏதேனும் அறிக்கைகள் இருப்பின் அவற்றை மூன்று நாள்களுக்குள் வெளியிடுமாறு உதய கம்மன்பிலவிற்குச் சவால் விடுத்தார்.

தற்போது அரசின் வசம் உள்ள விசாரணை அறிக்கைகள் ☞ 2

## தபால் வாக்கு விநியோகம் ஒக். 23 முதல் தொடங்கும்

பொதுத் தேர்தலுக்கான தபால் மூல வாக்காளர் இடாப்புக்கள் இன்று அத்தாட்சிப்படுத்தப்படுவதுடன், தபால் மூல வாக்காளர் அட்டை விநியோகம் ஒக்டோபர் 23 மேற்கொள்ளப் படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

2024 நாடாளுமன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்காளர்கள் மற்றும் உத்தியோகபூர்வமான வாக்காளர் ☞ 8

## ஷானியின் மீள் நியமனம் உள்நோக்கம் கொண்டது

### ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

குற்றவியல் துறையில் ஷானி அபேசேகர மீண்டும் ஒப்பந்த அடிப்படையில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டமை அரசியல் உள்நோக்கம் கொண்டது என்று ஐக்கிய மக்கள் சக்தி முன்னாள் ☞ 2

# நாடாளுமன்ற தேர்தலின் பின்னர் தேசிய அரசு அமைக்கவேண்டும்

### முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் வலியுறுத்து



பொதுத் தேர்தலின் பின்னர் தேசிய ஆளும்தரப்புஒன்றேஅமைக்கப்படவேண்டும்

என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் கண்டி மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளருமான ரவூப் ஹக்கீம் கண்டியில் தெரிவித்தார்.

இது தனது தனிப்பட்ட கருத்து என்று அவர் தெரிவித்தார். இருந்தாலும் தற்போதைய பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுக்க வேண்டிய நிலை இருப்பதால் தனது கருத்துடன் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையும் இது தொடர்பில் தமது இணக்கத்தை வெளிப்படுத்தும் எனத் தான் நம்புகிறார் எனவும் அவர் தெரிவித்தார். ☞ 2

## எதிர்க் கட்சிகள் ஆளும் தரப்புடன் கைகோர்த்து செயற்படவேண்டும்

### மல்வத்துபீட மாகாநாயக்கர் வலியுறுத்து

இந்த நெருக்கடியான தருணத்தில் எதிர்க் கட்சிகள் ஆளும் தரப்புடன் கைகோர்த்துச்செயற்படவேண்டும் என்று மல்வத்து பீடத்தின் மகாநாயக்கர் வண. திப்பெட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரர் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகள் தாம் ஆட்சிக்கு வருவதற்கான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருக்காமல், தற்போதுள்ள நெருக்கடியை சமாளிக்க எதிர்க்கட்சிகள் ஆளும்தரப்புடன்கைகோர்த்துதிட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஒத்துழைக்க வேண்டும் என்றார் அவர்.

கட்சியின் தலைவர் இமிதியாஸ் பாக்கீர் மாக்கர் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்திக் குழுவினருடனான சந்திப்பின்போதுமல்வத்துபீடாதிபதிஇதனை வலியுறுத்தினார். அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு நாட்டின் நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு ஒருங்கிணைந்த முயற்சியின் அவசியத்தை தேரர் எடுத்துரைத்தார். அனைத்து அரசியல் ☞ 2

## பொருளாதார நெருக்கடியிலிருந்து மீன்பிடிதுறையை மீட்க நடவடிக்கை

பொருளாதார நெருக்கடி காரணமாக மீன்பிடித்துறைக்கு ஏற்பட்டுள்ள தாக்கங்களை குறைத்து மீன்பிடித்துறையை இயல்புநிலைக்கு கொண்டுவருவதற்கான நிகழ்ச்சித்திட்டத்திற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

எரிபொருள் விலை பெருமளவில் அதிகரித்தமை காரணமாக மீன்பிடித்துறையில் ஏற்படும் பாதகமான தாக்கத்துக்கு தீர்வு வழங்குவதற்கு 2024.08.21 திகதி நடைபெற்றஅமைச்சரவைக்கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது;

இருந்தபோதிலும்,குறித்ததீர்மானம் இதுவரைஅமுல்படுத்தப்படவில்லை. எனவே, மீனவர்களின் பொருளாதார நிலையைமேம்படுத்துவதனை ☞ 8



## 77ஆவது சுதந்திரதினத்தை கொண்டாடக் குழு நியமனம்

### அமைச்சரவை அனுமதி

77 ஆவது சுதந்திரதினக் கொண்டாட்டத்தை நடத்துவதற்குத் தேவையான குழுவொன்றைநியமிப்பதற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் 2025.02.04ஆம் திகதி இடம் பெறவுள்ள 77 ஆவது சுதந்திரதினக் கொண்டாட்டத்தை நடாத்துவதற்குத் தேவையான வழிகாட்டல்கள் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகஜனாதிபதி தலைமையில்,பிரதமர்மற்றும் புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார விவகாரங்கள், தேசிய ஒருமைப்பாடு, சமூகப் பாதுகாப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சரின் பங்கேற்புடன் அமைச்சரவைக் குழுவொன்று நியமிக்கப்படவுள்ளது.

குறித்த சுதந்திரதின வைபவத்தைப்பெருமையுடன் ஒழுங்குபடுத்துவதற்கு அனைத்து ☞ 2

## பாடசாலை பேருந்து கட்டணத்தை குறைப்பதில் ஆளும் தரப்பு கவனம்

பாடசாலை மாணவர்கள் பயணிக்கும் சிற்றூர்திகள் மற்றும் பேருந்துக் கட்டணங்களை குறைப்பது குறித்து ஆளும்தரப்பு கவனம் செலுத்துவதாகவும், இது தொடர்பாக அடுத்த இரண்டு வாரங்களில் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்றும் புத்தசாசனம், சமயம், கலாச்சார அலுவல்கள், தேசிய ஒருமைப்பாடு, சமூக பாதுகாப்பு மற்றும் ஊடகத்துறை அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசு எரிபொருளின் விலையை குறைத்த போதிலும் பாடசாலை ☞ 2

### கம்பஹா, கொழும்பில்

## வெள்ள மீட்புப் பணிகளில் 8 கடற்படைக் குழுக்கள்

இலங்கையைபாதித்தசீரற்றகாலநிலை காரணமாகபெய்துவரும்கடும்மழையால் மேல் மற்றும் வடமேற்கு மாகாணங்களில் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. அதன் படி, பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக, பேரிடர் முகாமைத்துவ மத்திய நிலையத்துடன் ஒருங்கிணைந்து செயற்படும் 8 கடற்படை வெள்ள ☞ 2

## இனி இது .....

தெரிவித்திருந்தேன். இப்போது அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வது என்று தேர்தல் ஆணைக்குழு முடிவு செய்துவிட்டது.

தேர்தலில் போட்டியிட்ட 38 பேரில் 35 பேர் செலவு அறிக்கையை ஏற்கனவே தந்துவிட அரியநேத்திரனும் பத்திரமுல்லை சீலரத்ன தேரரும் சரத் கீர்த்திரத்னாவும் மட்டுமே தமது செலவு அறிக்கையை உரிய காலத்திற்குள் வழங்கவில்லை.

இதில் மற்றைய இருவரின் நிலையையும்விட அரியநேத்திரனின் நிலைதான் படுமோசம். அவரை வேட்பாளராக நிறுத்திய தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பையும் கலைத்துவிட்டார்கள். அந்தப் பொதுக்கட்டமைப்பில் இருந்த அரசியல் கட்சிகளில் 5, பொதுச் சபை உறுப்பினர்கள் இருவரையும் சேர்த்துக்கொண்டு நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்றது. அதனால் அரியநேத்திரனைக் கவனிக்க அவற்றுக்கு நேரமில்லை. பொதுச் சபையின் நிலாந்தன் பரிவாரங்களுக்கு காசுக் கணக்கை எப்படி எங்கிருந்து சமர்ப்பிப்பது என்று தெரியவில்லை. மொத்தத்தில் மாட்டிக்கொண்டது அரியநேத்திரன்தான்.

தமிழ் தேசியம், தேசத் திரட்சி, வடக்கு கிழக்கு ஒன்றுமை என்றெல்லாம் வசம் பேசி கடைசியில் அந்த மனிதரைப் பலிகொடுத்துவிட்டார்கள். அவர் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் சாராயக் கடை 'பெர்மிட்'டுகளும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டதில்லை. அதனால் அவரிடம் வழக்குக்குச் செலவழிக்க கோடிக் கணக்கில் பணமும் இல்லை. அரியநேத்திரனுக்காக ஜனாதிபதித் தேர்தலில் 'சங்கு' சின்னத்தை எடுக்கச் சொல்லிச் சிபாரிசு செய்த சிறீதரன் ஒருவேளை வழக்கை எதிர்கொள்ள உதவிசெய்யக்கூடும். அவருக்கும் ஒரு கடமை இருக்கிறதல்லவா?

..................

தமிழ் அரசுக் கட்சிக்கு எதிராக மற்றொரு வழக்கு யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது. தமிழ் அரசுக் கட்சியின் செயற்பாட்டை முடக்கும் வகையில் அது தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது. ஆனால், நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் கட்சியின் செயற்பாட்டை அந்த வழக்கால் முடக்க முடியவில்லை. அதன் விசாரணை நவம்பர் 18க்குத்தான் நாள் குறிக்கப்பட்டுள்ளது. அதற்கிடையில் நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளும் வெளியாகி இருக்கும்.

நாடாளுமன்றத் தேர்தல் முடிந்ததும் மாகாணசபைத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சித் தேர்தல்கள் வரவுள்ளன. அவற்றின் போதும் தற்போதைய மத்தியகுழுவே செயற்பட்டு முடிவுகளை எடுப்பதை தடுக்கும் நோக்கமும் திருகோணமலையில் சிறீதரனுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை மீளப் பெறுவதற்கான அழுத்தத்தை வழங்கும் நோக்கத்துடனுமே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது என்று ஒரு தகவல் கூறுகின்றது.

மாவையர் உட்பட கட்சி நிர்வாகிகளும் மத்தியசெயற்குழுவும் செயற்பட இடைக்காலத் தடை விதிக்கப்பட்டால், திருகோணமலை வழக்கைத் திரும்பப் பெற்றால் யாழ்ப்பாண வழக்கையும் திரும்பப் பெறலாம் என்று பேரம் பேசமுடியும் என்று வழக்கை முன்னகர்த்தியவர்கள் தரப்பில் உள்நோக்கம் இருப்பதாகக் கூறப்படுகின்றது. அது சாத்தியமாவதற்கான வாய்ப்புக்கள் வெகு குறைவு என்றே தெரிகின்றது.

..................

நேற்று வைத்தியசாலை ஒன்றுக்குச் சென்று திரும்பிய நண்பர் ஒருவர் அழைப்பெடுத்தார். சிரித்துக்கொண்டே நீங்கள் யாருக்கு வாக்குப் போடப் போகிறீர்கள் என்று கேட்டார். வழக்கமாக அப்படிப்பட்ட கேள்விகள் கேட்பவர் அல்லர் அவர். "ஏன்? என்னவாயிற்று?" என்று கேட்டேன். "இன்று எனக்கு யாருக்கு வாக்களிக்கவேண்டும் என்ற தெளிவு கிடைக்காவிட்டாலும் யாருக்கு வாக்களிக்கக்கூடாது என்ற தெளிவு கிடைத்தது. அதுதான் உங்களையும் கேட்டேன்" என்றார்.

அதற்கான தெளிவுரையையும் அவரே சொன்னார். சிறு அறுவைச் சிகிச்சைக்காக பிரதேச வைத்தியசாலை ஒன்றுக்குச் சென்றிருக்கிறார் அவர். அங்கு சிகிச்சையளித்த மருத்துவர் அவரிடம் யாருக்கு வாக்களிக்கப் போகிறீர்கள் என்று கேட்டிருக்கிறார். இதென்னடா வில்லங்கம் என்று பயந்துபோன அவர், அதை வெளியில சொல்லக்கூடாதுதானே டொக்டர் என்று முனகியிருக்கிறார். அதற்கு அந்த மருத்துவர், நீங்கள் யாருக்கு வேண்டுமானாலும் வாக்களியுங்கள், ஆனால் ஒரு டொக்டர் தலைமையில ஒரு குழுவும் போட்டியிடுகுது அதுக்கு மட்டும் தயவுசெய்து வாக்குப் போட்டிடாதையுங்கோ என்று பரிந்துரைத்திருக்கிறார்.

தான் ஏன் அப்படி ஒரு பரிந்துரை செய்கிறார் என்பதற்கான விளக்கங்களையும், வேட்பாளர் மருத்துவரின் தனிப்பட்ட தொழில்முறை வாழ்க்கை பற்றி அவர் எடுத்துவைத்திருக்கிறார். அந்தக் கதைகளைக் கேட்டதில் தனக்கு மயக்க மருந்து கொடுக்காமலேயே அறுவைச்சிகிச்சை செய்த வலி கொஞ்சமும் தெரியேல்லை என்றார் நண்பர்.

முந்தியெல்லாம் யாருக்கு வாக்களியுங்கோ என்று விகாரைகளிலும் தேவாலயங்களிலும் மக்களுக்கு மறைமுகமாக சிலசமயங்களில் நேரடியாவும் கூறுவார்கள். காலக் கொடுமை இப்போது வைத்தியசாலைகளிலும் அப்படிச் செய்யும் நிலைமையை ஏற்படுத்திவிட்டார்கள்.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## நாடாளுமன்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்டியில் திங்கட்கிழமை செய்தியாளர்களிடம் பேசிய ரவூப் ஹக்கீம் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய மக்கள் கூட்டணி என்ற வகையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஏழு மாவட்டங்களில் ஐக்கிய மக்கள் கூட்டணியுடன் இணைந்து போட்டியிடுகிறது. கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் தனித்து போட்டியிடுகின்றோம். அதன் மூலம் மேலும் 4 நாடாளுமன்ற ஆசனங்களைப் பெறுவதே எமது நோக்கமாகும்.

நாடாளுமன்ற தேர்தல். ஜனாதிபதி தேர்தலில் இருந்து முற்றிலும் மாறுபட்டது. விகிதாசார வாக்கு முறை நடைமுறைப் படுத்தப்பட்ட பின்னர் நான்கு ஜனாதிபதித் தேர்தல்களில் ஜனாதிபதியாக வெற்றி பெற்ற கட்சி பொதுத் தேர்தலில் குறைந்தபட்ச பெரும்பான்மையைப் பெற முடியாமல் போனது.

தேசிய மக்கள் சக்தி இம்முறையும் குறைந்தபட்ச பெரும்பான்மையைப் பெறாது என்பதை திண்ணமாகக் கூறலாம். தேசிய மக்கள் சக்தியில் வேட்பாளருக்கான பட்டியலைப் பார்க்கும்போது, மக்களுக்குத் தெரிந்த பிரபல அரசியல் பிரமுகர்கள் குறைவு. மேலும் நாடாளுமன்றம் என்பது வெறும் விளையாட்டுக் கூடம் அல்ல. திறமையும் அனுபவமும் உள்ளவர்கள் நாடாளுமன்றம் செல்ல வேண்டும் என்பதே மக்களின் கருத்தாக உள்ளது. தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் பட்டியலில் பெரும் குறைபாடு உள்ளது.

பொதுத்தேர்தலில் யார் வெற்றிபெற்று ஆட்சி அமைத்தாலும் நாட்டை நெருக்கடியிலிருந்து மீட்பதற்கு அவர்களுக்கு ஆதரவளிக்க வேண்டும். நாட்டின் ஜனநாயகம் வலுவாக இருக்க வலுவான எதிர்க்கட்சி அவசியம். மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவைக் கொண்டிருந்த ஆட்சியாளர்கள் நாட்டை வங்குரோத்தாக்கியதை நாம் அனைவரும் அறிவோம். இனி இது போன்ற சம்பவங்கள் நடக்காமல் இருக்க வாக்காளர்கள் தங்கள் வாக்குகளை கவனமாக பயன்படுத்துவார்கள் என்று நம்புகிறேன்.

கண்டியில் இருந்து ஐக்கிய மக்கள் கூடடணிக்கு 7 நாடாளுமன்ற ஆசனங்களைப் பெற்றுக் கொடுப்பதே எமது இலக்காகும். கடந்த குறுகிய காலத்தில் ஆளும்தரப்பு வாக்குறுதிகளை வழங்கிய போதிலும் அதனை நிறைவேற்ற எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை அதுமட்டுமன்றி, பொதுத் தேர்தலிலும் வாக்குறுதிகள் அள்ளி வீசப்படுகின்றன, ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக புதிய விசாரணை நடத்தப்படவேண்டும் என்று ஆளும்தரப்பு கூறுகிறது. கத்தோலிக்க திருச்சபை இவ்விஷயத்தில் மிகுந்த ஆர்வத்துடன் செயல்பட்டது. இது குறித்து நான் நாடாளுமன்றத்தில் பேசினேன். இது குறித்து தற்போதைய ஜனாதிபதியும் நினைவுபடுத்தியுள்ளார். எனவே வெளியாகியுள்ள உண்மைகளின் அடிப்படையில் சட்டமா அதிபருக்கோ அல்லது குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கோ விசாரணைகளை முன்னெடுப்பதற்கு இப்போது எந்தத் தடையும் இல்லை - என்றார்.

## வடக்கின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் ஓரளவு தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளக்கூடிய வசதிகள் உள்ள போதிலும் கிளிநொச்சி, வவுனியா அல்லது முல்லைத்தீவில் வாழும் மக்கள் மிகவும் கஷ்டமான வாழ்க்கையையே வாழ்கின்றனர். அங்குள்ளவர்கள் கல்வி முதல் அனைத்து விடயங்களையும் பெற்றுக்கொள்வதில் நெருக்கடியை எதிர்கொள்கின்றனர்.

இந்த மக்கள் மிகவும் வறுமைகைக்கு உட்பட்டவர்களாக உள்ளனர். தெற்கில் இருந்து வடக்குக்குச் செல்லும் பாதை அழகாக உள்ளது. பாதையின் இருபுறங்களிலும் கடைகள் உள்ளன. ஆனால், பாதையைத் தாண்டி உள்ளே சென்றால் வீடுகள் இல்லை. மக்கள் வறுமையாகவும் தமது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியாதும் வாழ்கின்றனர்.

உள்பாதைகள் மிகவும் மோசமான முறையில் புனரமைக்கப்படாது புழுதிகளுடன் காணப்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் சிலர் வெளிநாடுகளில் இருப்பதால் ஓரளவு பொருளாதாரம் உள்ளது. ஆனால், வவுனியா அல்லது கிளிநொச்சி சென்றால் அங்கு பொருளாதாரம் இல்லை. முல்லைத்தீவில் வாழும் மீனவர்கள் மிகவும் கஷ்டப்படுகின்றனர். விவசாயிகள் உற்பத்தி செய்யும் பழங்களையும், மரக்கறிகளையும் விற்பனை செய்துக்கொள்ள உரிய சந்தை வாய்ப்புகள் இல்லை. வேலைவாய்ப்புகள் மிகவும் குறைவாகும்.

தெற்கில் இருந்து அங்கு சென்று சுற்றுலாவில் நாம் ஈடுபட்டு வருகின்றோம். ஆனால், அங்குள்ள மக்களின் வாழ்கை முள்ளின் மேல் உள்ளது. பொதுமக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றி தேடுவதே அவசியமாக உள்ளது. காணி முரண்பாடுகள் நீண்டகாலமாக உள்ளன. போர்க்காலத்தில் தமது காணியைக் கைவிட்டு வெளியேறிய மக்கள் போர் நிறைவடைந்து சென்றபோது அந்தக் காணிகளை வேறு நபர்கள் கைப்பற்றி குடியேறியுள்ளனர். அரசு தலையீடு செய்து அந்தப் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டியுள்ளது.

பிரச்சினைகள் அவ்வாறுள்ளன. ஆனால், இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்காத வடக்கின் தமிழ் அரசியல் தலைவர்கள், தமது அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்ள 13ஆவது திருத்தச்சட்டம் மற்றும் அதிகாரப்பகிர்வு போன்ற வசனங்களைப் பயன்படுத்திக்கொண்டனர். ஆனால், வடக்கின் அடித்தட்டு மக்களுக்கு 13ஆவது திருத்தச் சட்டம் அவசியமில்லை. அவர்களுக்கு அதிகாரப் பகிர்வு அவசியம் இல்லை. அவர்களுக்கு விசாயத்தை மேற்கொள்ள நீர் வசதிகளும், அவற்றை சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்புகளும், கல்வியும், நல்ல வைத்தியசாலைகளுமே அவசியமாக உள்ளன.

எமது நாட்டில் ஒருவர் கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்றால் அவர் கொழும்புக்கு கட்டாயம் வரவேண்டிய தேவையுள்ளது. கண் பரிசோதனைகளுக்கு யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு வரவேண்டியுள்ளது. அனைத்தும் கொழும்பை மையப்படுத்தியுள்ளன. இவ்வாறு கொழும்பை மைப்படுத்தியுள்ள அனைத்து விடயங்களும் நாட்டின் அனைத்து பிரதேசங்களுக்கும் செல்லும்போது மக்களின் பிரச்சினைகள் தீரும்.

குறிப்பாக எமது நாட்டில் உற்பத்தி பொருளாதார முறைமையொன்று உருவாக்கப்படவேண்டும். அந்தப் பொருளாதாரத்தின் பங்காளிகளாக அனைத்து பிரதேச மக்களும் ஒன்றிணைக்கப்பட வேண்டும் என்பதுடன், அந்த பொருளாதாரத்தின் பிரதிபலன்களும் அவர்களுக்கு கிடைக்க வேண்டும்.

உற்பத்தி பொருளாதாரத்தின் பயன்கள் அனைத்து தரப்பினருக்கும் கிடைக்கும்போது நாட்டில் தற்போது காணப்படும் பிரச்சினைகளில் பெரும்பான்மையானவற்றுக்குத் தீர்வு கிடைத்துவிடும். அதன் ஊடாக அடிப்படைப் பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைக்கும் - என்றார்.

## வெள்ள....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிவாரணக் குழுக்கள் கம்பஹ, கொழும்பு மற்றும் புத்தளம் மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

கடும் மழை காரணமாக களு கங்கை, களனி கங்கை, அத்தனகலு ஓய மற்றும் தெதுரு ஓய ஆகிய பிரதான மற்றும் கிளை ஆறுகள் நிரம்பி வழிவதால், கொழும்பு, கம்பஹ மற்றும் புத்தளம் மாவட்டங்களில் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இந்த நிலையில், பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகளை வழங்குவதற்காக கடுவெல, மாபிம, நவகமுவ, இஹலகம, ஜா-எல மற்றும் நாத்தண்டிய ஆகிய பகுதிகளுக்கு கடற்படை வெள்ள நிவாரணக் குழுக்கள் அனுப்பப்பட்டுள்ளதுடன் கடற்படை நிவாரணக் குழுக்கள் வெள்ள நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

அதன் படி, 641 பேருக்கு டிங்கிகள் மூலம் பாதுகாப்பான போக்குவரத்து வழங்குதல், 4876 பேருக்கு சமைத்த உணவு மற்றும் உலர் உணவுகளை விநியோகித்தல், நீரில் மூழ்கும் அபாயத்தில் 03 பேரை மீட்டு மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச்செல்வது உள்ளிட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு உதவ நிவாரணக் குழுக்கள் தீவிரமாக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

மேலும், அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்துடன் ஒருங்கிணைத்து மேற்கு கடற்படை கட்டளையில் இருபத்தி இரண்டு கூடுதல் நிவாரணக் குழுக்களும், தெற்கு கடற்படை கட்டளையில் ஒன்பது மற்றும் வடமேற்கு கடற்படை கட்டளையில் பதினேழு கூடுதல் நிவாரணக் குழுக்களும் உட்பட மொத்தம் 48 குழுக்கள், தேவைப்படும்போது உடனடியாக அனுப்புவதற்குத் தயாராக உள்ளன.

## 77ஆவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள், முப்படையினர் மற்றும் பொலிஸ் திணைக்களம் உள்ளிட்ட நிறுவனங்களின் பிரதானிகளின் பங்கேற்புடன் வழிநடாத்தல் குழுவொன்றை நியமிப்பதற்காக நீதி, பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபை அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## எதிர்க்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர்களும் ஒன்றிணைந்து செயற்படுமாறு நீண்டகாலமாக வலியுறுத்திய போதிலும் அது பயனளிக்கவில்லை என்பதையும் அவர் அங்கு சுட்டிக்காட்டினார்.

அதிகாரத்தை நாடாமல், நாட்டு நலனுக்காக அரசுடன் ஒத்துழைப்பதே காலத்தின் தேவை. அரசியல் கட்சிகளின் நலனில் அக்கறை காட்டாமல், மக்கள் நலனிலேயே முதன்மையாக இருக்க வேண்டும். அரசியல்வாதிகள் இனி பொதுமக்களை தவறாக வழிநடத்த முடியாது. தேர்தல்களின் போது எப்படி சரியான முடிவுகளை எடுப்பது என்பது பற்றி மக்கள் இப்போது நன்கு உணர்ந்துள்ளனர் என்றும் மகாநாயக்க தேரர் மேலும் தெரிவித்தார்.

நாட்டின் நிலைமையை தமது கட்சியினர் முழுமையாகப் புரிந்துகொண்டுள்ளனர் எனம், ஆளும் தரப்புடன் ஒத்துழைக்க ஐக்கிய மக்கள் சக்தி தயாராக இருப்பதாகவும் மார்க்கார் தெரிவித்தார்.

பிரான்ஸில் ஜனாதிபதியும், நாடாளுமன்றப் பெரும்பான்மை கொண்ட ஆளும்தரப்பினரும் வெவ்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள். அமெரிக்காவிற்கும் இதேபோன்ற அனுபவங்கள் உள்ளன. ஜனாதிபதியின் முற்போக்கான முயற்சிகளுக்கு நாங்கள் ஒத்துழைப்போம். உலகின் பல நாடுகள் தீவிர இடது அல்லது வலது சித்தாந்தங்களை கைவிட்டு நடுத்தர பாதையை தேர்ந்தெடுத்துள்ளன. சமீபத்திய ஜனாதிபதித் தேர்தலின் போது ஐக்கிய மக்கள் சக்தி ஒரு சோசலிச நிகழ்ச்சி நிரலை முன்வைத்தது, ஆனால் மக்கள் மோசடி மற்றும் ஊழலை ஒழிப்பதற்கு முன்னுரிமை அளித்தனர் என்று அவர் மேலும் கூறினார்.

## பாடசாலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்கள் பயணிக்கும் வாகனங்களின் கட்டணங்கள் குறைக்கப்படவில்லை. இதன்படி எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு இது தொடர்பில் தீர்மானிக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## ஷானியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலின்போது தேசிய மக்கள் சக்தியின் மேடையில் தோன்றிய ஷானியின் நியமனம் அரசியல் உள்நோக்கம் கொண்ட ஒன்று என்றார் அவர்.

எப்படியிருப்பினும், ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்களுக்கு காரணமானவர்களை அவர் விரைவில் கண்டுபிடிப்பார் எனத் தாம் எதிர்பார்க்கிறோம் என்றார் ஹர்ஷன.

# 2009இன் பின்னர் தமிழ் மக்களின் ஆணையை தமிழ் அரசியல்வாதிகள் நிறைவேற்றவில்லை

## 'பசு' சின்னத்தில் போட்டியிடும் ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு வேட்பாளர் தேவானந்த் குற்றச்சாட்டு




2009இல் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர் ஓர் அரசியல் தீர்வை நோக்கியதான நகர்வுக்காக மக்கள் தமது ஆணையை வழங்கி வந்துள்ளார்கள். ஆனால் ஆணையைப் பெற்ற அரசியலாளர்கள் அதனைச் சரியாகப் பயன்படுத்தப்படவில்லை. மக்களின் விருப்பங்கள் நிறைவேற்றப்படவில்லை. அதனால் தான் தமிழ் தேசியப் பேரவை மற்றும் தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பின் கொள்கைகளின் வழி நாம் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்றோம்.

இவ்வாறு 2024 நாடாளுமன்றத் தேர்தலிலே யாழ். மாவட்டத்தில் பசு சின்னத்தில் போட்டியிடும் ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் சுயேச்சைக் குழு தலைமை வேட்பாளர் கலாநிதி தேவானந்த் இதனைத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்றைய அரசியல் சூ-ழலில் தமிழ் மக்கள் மத்தியில் பரந்த எதிர்ப்புணர்வு இருப்பதைப் பார்க்க முடிகின்றது. போரால் முடிந்த பின்னர் தமிழ் மக்கள் தமது வாழ்க்கை மேம்பாடு, அரசியல் இருப்பு, சுயநிர்ணயம் என்பவை சார்ந்து ஒரு தீர்வு நோக்கிச் செல்லும் என்று பேரவாவோடு இருந்தார்கள். ஆனால் அவர்களின் பேரவா நிறைவேறும் திசையை நோக்கி எமது அரசியல் செல்லவில்லை. எனவேதான் ஒரு மாற்றம் தேவை என்று இன்று எண்ணுகின்றார்கள். தமது வாழ்வின் தேடலாக, தமது விரக்திக்கான வடிகாலாக இந்த நாடாளுமன்றத் தேர்தல் களத்தைப் பார்க்கிறார்கள்.

இந்த அரசியல் சூழலையே தமிழர் சம உரிமை இயக்கம் பயன்படுத்திக்கொள்ள -முனைகின்றது. எமது இயக்கம் தேர்தலுக்காக முளைத்த ஒரு கட்சி அல்ல. நீண்ட பயணத்தைக் கொண்ட இயக்கம். இப்போது தேர்தல் களத்தில் அது தன்னை முன்னிலைப்படுத்தியிருக்கின்றது. 2009இல் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர் ஓர் அரசியல் தீர்வை நோக்கியதான நகர்வுக்காக மக்கள் தமது ஆணையை வழங்கி வந்துள்ளார்கள். ஆனால் ஆணையைப் பெற்ற அரசியலாளர்கள் அதனைச் சரியாகப் பயன்படுத்தப்படவில்லை. மக்களின் விருப்பங்கள் நிறைவேற்றப்படவில்லை. அதனால் அந்தப் பயணத்தில் தொடர்ச்சியாக இணைந்திருந்த பலர், முக்கியமாக தொழில்வல்லுநர்களான மருத்துவர்கள், பொறியியலாளர்கள், கல்வியியலாளர்கள் எனப் பலர் இணைந்துதான் இன்று சமஉரிமை இயக்கத்தின் ஊடாக தேர்தலில் போட்டியிடுகின்றோம். தமிழ்த் தேசிய சக்தி என்கிற பின்புலத்தில் இருந்துதான் இந்த இயக்கம் இயங்குகின்றது.

### பொருளாதார மேம்பாடு

கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதன் ஊடாக தேசியத்தை நோக்கி நகர்தல் என்பது எமது முக்கிய குறிக்கோள். போரால் பாதிக்கப்பட்ட மக்கள் இனி-யும் நலிந்து கிடக்காமல் பொருளாதாரத்தில் மேம்படவேண்டும். ஏனென்றால் எப்போதுமே ஓர் அடிப்படையான தேவை பூர்த்தி செய்யப்படும்போதுதான் அந்த மக்கள் அல்லது இனம் தமது விடுதலையைப் பற்றி முழுமையாகச் சிந்திக்க முடியும். உச்சமான சுயநிர்ணய உரிமைக்கான தேடலில் ஈடுபடமு-டியும். அதை நோக்கி நகர்வதுதான் எமது முதன்மைக் கொள்கை.

இப்போதைய அரசியல் சூழலில் மக்களின் அடிப்படைத் தேவைகளை முன்னெடுப்பதற்கான எந்தவொரு கொள்கை முன்னெடுப்பும் செயற்றிட்டங்களும் பரந்தளவில் மேற்கொள்ளப் படவேயில்லை. அதற்குப் பதிலாகக் கிள்ளித் தெளிக்கும் நிலைதான் வலுப்பெற்றுள்ளது. சலுகை அரசியல்தான் இடம்பெறுகின்றது. இதனால் ஒரு சிலர் மட்டும்தான் நன்மை அடைகிறார்கள். அந்த நிலை மாறி ஒட்டுமொத்த தமிழ் மக்களும் நன்மையடைய வேண்டும் என்பதுதான் எமது இலக்கு. இதற்கு மக்களிடம் அதிகாரம் இருக்கவேண்டும். அதை வலியுறுத்தித்தான் தமிழர் சமவுரிமை இயக்கம் இந்தத் தேர்தல் களத்திலே இறங்கியிருக்கின்றது.

### கல்வி

ஒரு காலத்தில் கல்வியில் மிக உயர்ந்த நிலையில் இருந்த நாம் இன்று பின்னடைந்து இருக்கின்றோம். அதிலிருந்து மீளவேண்டும். எல்லோருக்கும் சமமான கல்வி என்பதே எமது இலக்கு. எல்லோரும் சம வாய்ப்பைப் பெறுவதற்கான ஒரு சூழலை நாங்கள் உருவாக்க வேண்டி இருக்கின்றது. எமது கல்விப் பின்னடைவுக்கு அதில் உள்ள அரசியல் தலையீடு முக்கிய காரணம். தொடக்க நிலைக் கல்வியாக இருந்தாலும், பாடசாலைக் கல்வியாக இருந்தாலும், பல்கலைக்கழக கல்வியாக இருந்தாலும் எல்லா இடங்களிலும் அரசியல் தலையீடு காணப்படுகின்றது.

அண்மைய தரவுகளின் அடிப்படையில் கிட்டத்தட்ட 87 பாடசாலைகள் யாழ். மாவட்டத்தில் மட்டும் மூடப்பட்டுள்ளன. அப்படிப் பாடசாலைகளை மூடுவதற்கான கல்விக் கொள்கையைத்தான் நாம் வைத்திருக்கின்றோம். கிராமங்களில் இருந்து நகரங்களை நோக்கி கல்வித் தேவைக்காகத் தினமும் பெற்றோர்கள் படையெடுக்கவேண்டியதாக இருக்கின்றது. அதற்காகவே அவர்கள் நிறையச் செலவிடுகின்றார்கள். இந்த நிலை மாறவேண்டும். கிராமத்தில் உள்ளவர்களுக்கும் நகரத்தில் உள்ளவர்களுக்கும் சமமான கல்வி வாய்ப்பு கிடைக்கவேண்டும். அதனடிப்படையிலேயே தமிழர் தேசம் கட்டியெழுப்பப்படவேண்டும். அதுவே எமது இலக்கு.

### மருத்துவத்துறை

ஆதார வைத்தியசாலைகள் இருக்கக்கூடிய அனைத்து இடங்களிலுமே தரமான மருத்துவ சேவை வழங்கப்படவேண்டும். ஆதார வைத்தியசாலைகள் தரமான வள ஆளணிகளோடு இல்லை. அதைத் தரவேண்டிய மத்திய அரசு அதை வழங்கவில்லை. அரச இலவச வைத்தியத்துறையை தனியார் மயப்படுத்தும் நோக்கோடு கொழும்பு செயற்படக்கூடும். அதற்கு அனுமதிக்கக்கூடாது. நாம் அதை எதிர்ப்போம். தரமான மருத்துவ சேவை அனைத்து மக்களுக்கும் கிடைப்பதை உறுதிப்படுத்துவதற்காகப் பாடுபடுவோம்.

### வெளிப்பாட்டுச் சுதந்திரத்திற்கான போராட்டம்

வெளிப்பாட்டுச் சுதந்திரத்தின் மீதான அடக்குமுறைகளை எதிர்த்து நிற்போம். கொல்லப்பட்ட, பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான நீதியை வலியுறுத்துவோம். ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் அவர்களின் உரிமைகளைப் பாதுக்காகவும் முன்னிற்போம்.

பெண்களுக்கு சமஉரிமை வழங்குவது எமது அடிப்படைக் கொள்கை. எமது வேட்பாளர் பட்டியலிலேயே நான்கு பெண்கள் இடம்பெற்றுள்ளனர். யாழ். மாவட்டத்தில் போட்டியிடும் அரசியல் கட்சிகளில் எதிலும் எமது வேட்பாளர்கள் அளவிற்குப் பெண்கள் கிடையாது. மூத்த சட்டத்தரணிகள், சமூகச் செயற்பாட்டாளர்கள், தொழில்முனைவோர் என்று பல்துறை சார்ந்த பெண்களும் எமது தரப்பில் போட்டியிடுகின்றனர். பெண்களுக்கான உரிமைக்காகப் போராடுவதே எமது நோக்கம்.

### பல கோடி ரூபாய் அரசியல்

அரசியலில் ஈடுபடுவதென்றால் பல கோடி ரூபாய் தேவை என்ற பேச்சு இருக்கின்றது. நாங்கள் அவ்வளவு பணம் செலவழிக்கக்கூடியவர்கள் இல்லை. அப்படிச் செலவழிப்பவர்களுக்கு அந்தப் பணம் எங்கிருந்த வருகிறது? செலவழித்த பணத்தை அவர்கள் அரசியலிருந்து எப்படித் திரும்பப் பெறுவார்கள், என்பதை மக்கள் சிந்திப்பார்களாயின் யாருக்கு வாக்களிக்கவேண்டும் என்பது அவர்களுக்குத் தெளிவாகிவிடும்.

நீங்கள் இன்று 5 ஆயிரம் ரூபாய்க்கு வாக்குகளை விற்றால் இன்னும் 5 வருடங்களுக்கு அவர்கள் உங்களைக் கவனிக்க மாட்டார்கள்.

### மதுபான நிலைய உரிமம்

இலங்கையில் மதுப் பாவனையில் யாழ்ப்பாணம் இரண்டாவது இடத்தில் இருக்கின்றது. நுவரெலியா முதலாவது இடத்தில் இருக்கின்றது. இவை இரண்டுமே தமிழ்ப் பகுதிகள். இந்த மக்களை மது போதைக்குப் பழக்கப்படுத்துவதும் அடிமையாக்குவதும் திட்டமிடப்பட்ட செயற்பாடு. ஒரு இனத்தை அதுவும் தமது உரிமைக்காகப் போராடிய ஒரு இனத்தைச் சிதைப்பதற்காக மிக நுட்பமாகத் திட்டமிடப்பட்ட ஒரு செயற்பாடுதான் இந்த மதுவும் போதைப் பொருள்களும். இன்று இளைஞர்கள் பலர் போதைக்கு அடிமையாகி இருக்கின்றார்கள். அதனால் மிக இளவயதிலேயே இறந்தும் போகிறார்கள். அதனால் அவர்களின் குடும்பங்கள் பாதிக்கப்படுகின்றன. இந்தப் பின்னணியில் தமிழ் அரசியல்வாதிகள் மதுபான விற்பனை நிலைய அனுமதியில் அக்கறை கொண்டிருந்தார்கள் என்பது நிச்சயமாக தமிழ் மக்களைப் பாதிக்கும் ஒரு விடயம். அதை அதை அவர்கள் தவிர்த்திருக்கவேண்டும். மதுவுக்கும் போதைப் பொருளுக்கும் எதிரான விழிப்புணர்வு நடவடிக்கைகளிலே தமிழ் அரசியல்வாதிகளைப் பார்க்கமுடியும். ஆனால் அவர்கள்தான் மது விற்பனை நிலையங்களுக்குப் பின்னாலும் இருக்கிறார்கள் என்பது பெரும் அபத்தம்.

# கனடியத் தூதுவர் நேற்று முல்லைத்தீவுக்கு வருகை

இலங்கைக்கான கனடியத் தூதுவர் எரிக் வோல்சு நேற்று முல்லைதீவுக்கு வருகை தந்தார். கனடியத்



தமிழர் பேரவையின் இலங்கைக்கான மனித நேய பணிகளுக்கான இணைப்பாளர் துசியந்தன் இராசலச்சுமி துரைரத்தினம் மற்றும் வடக்குக் கிழக்கு பொருளாதார மேம்பாட்டு நடுவத்தின் இயக்குனர் பிரதீபன் சோதிலிங்கம் ஆகியோரும் அவருடன் வந்திருந்தனர்.

முல்லை மாவட்டச் செயலகத்தில் மாவட்ட செயலாளரைச் சந்தித்த அவர்கள், வடக்குக் கிழக்கை இணைக்கும் புள்மோட்டை பாலம் மற்றும் வட்டுவாகல் பாலம் ஆகியவற்றை அமைப்பது குறித்துக் கலந்துரையாடினர்.

தொடர்ந்து விரைவில் அமையவிருக்கும் மேட் இன் (made in) முல்லைத்தீவு காட்சி அறைக்குச் சென்று பார்வையிட்டனர்.

ஒட்டுசுட்டான் சின்னதம்பி ஆரம்ப பாடசாலைக்குச் சென்ற அவர்கள், அங்கு புதிதாக அமைக்கப்பட இருக்கும் கட்டடம் பற்றிய தகவலைத் தெரிவித்தனர். மாணவர்,





அதிபர், ஆசிரியர் மற்றும் பெற்றோர் முன்னிலையில் இவ்வறிவிப்பு வெளியிடப்பட்டது.

இறுதியாக கனடியத் தமிழர் பேரவையால் முன்னெடுக்கப்படும் முல்லை கைத்தறி நெசவு நிலையத்தில் ஒரு சந்திப்பு இடம்பெற்றது. புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள இந்த நிலையத்தில் பெண் தலைமை தாங்கும் குடும்பங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த

கைத்தறி நெசவுப் பயிற்சி நடைபெற்று வருகிறது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தமிழர்கள் ஜேவிபியை நம்புவது துர்பலமே!

தமிழ் மக்களின் அதிகாரப் பகிர்வு தொடர்பில் ஜேவிபிக்குள் தொடர்ந்து நிலவி வரும் பழமைவாத சிந்தனைக்கும் புதிய சிந்தனைகளுக்கும் இடையிலான மோதல் மீண்டும் ஒரு தடவை வெளிப்பட்டிருக்கின்றது. கட்சியின் பொதுச் செயலாளரான ரில்வின் சில்வா அதிகாரப் பகிர்வு தமிழ் மக்களின் தேவையல்ல அது தமிழ் அரசியல்வாதிகளின் அதிகார மோகம் என்று கூறியிருக்கின்றார்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன, பிரேமதாச, மகிந்த ராஜபக்ச, கோட்டாபய ராஜபக்ச என்று பல தலைவர்களும் இதே கருத்தைத்தான் வலியுறுத்தி வந்தார்கள். இலங்கையின் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்த்து தமிழ் மக்களின் பொருளாதார நிலமைகளை மேம்படுத்திவிட்டால் அவர்கள் உரிமைப் போராட்டத்தில் ஈடுபடமாட்டார்கள் என்பதே இந்த சிங்களத் தலைவர்களின் கருத்தாக இருந்தது.

இந்த நாட்டில் இருப்பது பொருளாதாரப் பிரச்சினையே அன்றி இனப்பிரச்சினை அல்ல என்றார்கள் இந்தத் தலைவர்கள். ரணில் விக்கிரமசிங்க இந்தக் கருத்தை நேரடியாகக் கூறவில்லை என்றாலும் அவ்வப்போது இந்தச் சாராம்சத்தை ஒத்த கருத்துக்களை அவரும் கூறத் தவறியதில்லை. தமிழர்களின் பிரச்சினையை சிலர் இனப் பிரச்சினை என்கிறார்கள், சிலர் தேசியப் பிரச்சினை என்கிறார்கள், சிலர் இது வடக்கு அரசியல்வாதிகளின் பிரச்சினை என்கிறார்கள் என்ற வகையில் அவர் ரணில் தனது இடதுகையால் இந்த விவகாரத்தைக் கையாண்டிருப்பார்.

இவர்களின் கருத்தைத்தான் ரில்வின் சில்வாவும் இப்போது வேறு வார்த்தைகளில் கூறுகின்றார். தமிழ் மக்களுக்கு அடிப்படைத் தேவைகளான கல்வி, சுகாதார, அரச சேவை வசதிகளும் பொருளாதார மேம்பாடுமே தேவையாக இருக்கின்றது. வடக்கு அரசியல்வாதிகளே அரசமைப்பின் 13ஆவது திருத்தம், அதிகாரப் பகிர்வு என்றெல்லாம் கூறுகின்றார்கள் என்று தனது நேர்காணலில் தெரிவித்திருக்கின்றார்.

அவரது கருத்து அரசுத் தலைவர் தேர்தலில் அநுரகுமாரவை முன்னிறுத்தி தேசிய மக்கள் சக்தி வெளியிட்ட தேர்தல் அறிக்கைக்கு முரணானது. அல்லது அரசுத் தலைவர் அநுரவின் கொள்கைக்கு முரணானது. அதிகாரப்பரவலாக்கம்மூலம்அனைத்துமக்களுக்குமான தீர்வை முன்னிறுத்துவதே தமது நோக்கம் என்றாலும் தமிழ் மக்கள் தமது தனித்துவத்தை முன்னிறுத்தி அதிகாரப் பகிர்வைக் கோரும் உரிமையை ஏற்றுக்கொள்வதாக அநுரவின் கொள்கை கூறுகின்றது. அதுவும் போக தமிழ் மக்களுக்கு ஒரு நிரந்தர அரசியல் தீர்வு கிடைக்கும் வரையில் அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது என்பதும் அவரது கொள்கையாக இருக்கின்றது. அவரது தேர்தல் அறிக்கையிலும் அது பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழர்களுக்கு எதிரான, தமிழர்களின் ஆயுதப் போராட்டத்திற்கு எதிரான மிகத் தீவிரமான கொள்கைகளைக் கொண்டிருக்கும் கட்சி ஜேவிபி. தமிழர்களுக்கு எதிரான கொழும்பு அரசின் போருக்கு உச்ச அளவில் ஆதரவு வழங்கி, சிங்கள இளைஞர்களைப் போருக்குத் திரட்டிக்கொடுத்த கட்சி அது. வடக்கு கிழக்கு மாகாணங்களின் இணைப்பைப்பிரித்துதமிழர்தாயகத்தைச்சிதைத்தகட்சி. இருந்தாலும் இவையெல்லாம் தமது கட்சியின் பழமைவாதச் சிந்தனைகளின் அடிப்படையிலான முடிவுகள், இப்போது கட்சி அவற்றைக் கடந்து வந்துவிட்டது. தனது தவறுகளை உணர்ந்திருக்கின்றது என்ற வகையிலேயேஅந்தக்கட்சியின் இளம்நாடாளுமன்ற உறுப்பினர்களும் தலைவர்களும் கட்சியை முன்னிறுத்த முயற்சிக்கின்றனர்.

அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்க கட்சியின் அந்தப் புதிய முகங்களின், கொள்கைகளின் அடையாளம். அதனால்தான் அவரது தேர்தல் அறிக்கை தமிழர்கள் குறித்து ஒப்பீட்டளவில் முற்போக்கான அம்சங்களைக் கொண்டிருந்தது. ஆனால், ஜேவிபிக்குள் பழைமைவாதச் சிந்தனைகளின் செல்வாக்கு இன்னமும் உயர் மட்டத்தில் இருக்கின்றது என்பதையும். அது சிங்கள இனவாதத்தை முன்னிறுத்தி வாக்குகளைக் கவர்வதில் தொடர்ந்தும் தீவிரமாக இருக்கின்றது என்பதையும் அந்தக் கட்சியின் பொதுச் செயலாளரான ரில்வின் சில்வாவின் கருத்து வெளிப்படுத்தியுள்ளது.

அநுரகுமார தேசிய மக்கள் சக்தியின் அரசுத் தலைவராக இருந்தாலும், ஜேவிபியின்கட்டுப்பாடுமுழுமையாகரில்வின்சில்வாவின் கைகளிலேயே இருக்கின்றது. ஆட்சியில் அமைச்சர்களை நியமிப்பது முதல் கட்சியின் அனைத்து முடிவுகளிலும் அவரது ஆதிக்கமே இருக்கின்றது. ஜேவிபியின் வெளித் தெரியும் முகமாக அநுர முன்னிறுத்தப்பட்டிருந்தாலும் அதன் இறுக்கமான கட்டமைப்பின் இரும்புப்பிடி ரில்வின் வசமே இன்னமும் இருக்கின்றது. எனவே அவரது கருத்தை யாரோ ஒரு அரசியல்வாதியின் கருத்தாகப் புறமொதுக்கிச் சென்றுவிடமுடியாது.

தமிழர்கள் விடயத்தில் ஜேவிபியின் உள்ளக நிலைப்பாட்டில் பெரிய மாற்றம் இல்லை என்பதையும் அவர்கள் சிங்கள, பௌத்த பெரும்பான்மைவாதச் சிந்தனையில் இருந்தே இனப்பிரச்சினையை அணுகப் போகிறார்கள் என்பதையும் ரில்வினின் கருத்து ஆணித்தரமாகப் போதிக்கின்றது. அநுரவினதும் தேர்தலில் ஜேவிபியால்முன்னிறுத்தப்படும் இளம்நாடாளுமன்றமுகங்களினதும் மென்போக்கு கட்சிக்குள் தலையெடுத்து அதன் அரசியல் நிலைப்பாடுகளை முழுமையாக மாற்றுவதற்கு இன்னும் நீண்டகாலம் எடுக்கும். அதுவரை ஜேவிபியை தமிழர்கள் நம்புவது துர்பலமே!

யாழ்ப்பாணத்தில் திராவிடத்துக்கு இடமில்லையா: தமிழ்ச் சாமிகளின் அவலநிலை

# யாழ்ப்பாணம் தமிழர் பூமியா?




**பேராசிரியர் துஷ்யந்தி ஹூல்**

யாழ்ப்பாணத்தாரின் அடையாளம் எது என்று கேட்டால்சைவம், சிவபூமிஎன்கின்றனர். சிங்களவரோ மொழியைச் சுட்டி, 'தெமிழ' என்கின்றனர்.

யாழ்ப்பாணததில் திராவிடம் ஒழுந்ததா, மறுக்கப்படுகிறதா? இங்கு பிராமணரென்பாரின் சமஸ்கிருதக் கலப்படமான வைதீகம் நாவலரால் நிலைநாட்டப்பட்டது. அதாவது ஆரியரின் இந்து வேதங்கள்தான் முதற் பெருமையாகிறது. இதற்கு சான்றாய் யாழ்ப்பாணத்தில் வேல் என்ற தமிழ்ச் சின்னம் நல்லூர் ஸகந்தஸ்வாமி தேவஸ்தானமாகி, பல்கலைக் கழக செயற்பாடுகளும் ஆரியரின் இந்து சமயத்தை மட்டுமே பிரதிபலிக்கின்றன. இதனால் தமிழருக்குரிய திராவிடம் மறைந்து போயிற்று.

இந்து சமயமென்ற பதம் 200 வருடங்களுக்கு முன்புதான் எழுந்தது. இன்றும் அது அகராதிகளில் ஆரியரின் மதத்தை மட்டுமே குறிப்பதாகிறது. அப்படியானால் யாழ்ப்பாணத்தர் தமிழ் பேசும் திராவிடரில்லையா? ஏனெனில், திராவிட சின்னங்களான சங்கிலித்தோப்பென்ன, கந்தரோடை சங்குவெளியென்ன சகலமும் தமிழர் அடையாளத்தையும், இறைமையையும் இழந்து நிற்கின்றன.

இரண்டுமே யாழ்ப்பாண அரசர்களின் பாரம்பரிய மத-அரசத்துவத்தை நிறுவிய தலங்கள். இவை அடையாளமழிந்துள்ளன. தமிழருக்கு தம் சுயஅடையாளத்தை நினைத்துப் பார்க்கவே வெட்கம்போல் தம் பூர்வீகத்தை மறந்துள்ளனர். இளைப்பாறிய பேராசிரியர்களான குறிப்பாக புஷ்பரத்தினம் பத்மநாதன், ஆகியோரின் அறிவுத்தள கட்டுரைகள் மட்டுமே இதற்கு ஓரளவு சான்றாகின்றன. யாழ்ப்பாணத்தின் அடையாளம் சைவம் என்பது திராவிடத்தின் சமய ஒழிப்பாகிறது எனலாம். எப்படி என்று வினவுவோம்.

சைவத்தின் முழுமுதற் கடவுள் சிவன். அது பிற்தேவார காலத்தில் தமிழுக்குள் வந்தது. சுவன், சிவன் (சுவப்பு என்பதை சிவப்பு என்றெழுதுவதுபோல்) என்ற பெயர் சுமெரிய தெய்வத்தின நாமம். அதை காஷ்மீர், காஞ்சிபுரமென்று ஆதீனங்களை நிறுவிய யூதகிறிஸ்தவர் மணியால் மாணிக்கிய சமயத்தில கி.பி. 250 போல் கற்பிக்கப்பட்டது. சுப்ர என்பது சுமெரியத்தில் புனிதஒளிர்வுடைய என்பதால் முக்தி பெற்றாரென்று இருமுறைபிறந்த சுப்பிரமணி எனப்பட்டார். தமிழக கிறிஸ்தவர் மாணிக்கியராக்கப் பட்டனர். சங்கவிலக்கிய முக்கண்ணன் என்பது சிவன் எனபர். அது அன்றைய புத்தருட்பட சுமெரியா, திராவிட ஆண், பெண் தெய்வங்களுக்கும் பாவிக்கப்பட்டது. ஆனால் சைவம் ஆரிய மரபு. நாவலரதை வைதீகமென்று வலியுறுத்தினார். வைதீகம் என்பது ஆரியரின் வேதங்களை ஆதாரமாய்க்கொண்ட சமயம். வைதீகத்தில் இயல், இசை, நாடகம் உட்பட, தமிழ்மொழி வேதியத்தின் காவியாய்ப் பாவிக்கப்பட்டுள்ளதோடு சமஸ்கிருத கலப்படம்; தமிழின் செம்மொழித் தன்மையை மறைத்தது.

ஆரியர் பூரவீகம் ரஷ்யா என மரபணு ஆராய்ச்சியாளர் காட்டுகின்றனர். தம்மை வெள்ளையென்பது அதனாலாகும். யூரல் நதி, அமுதாயா, யமுனா நதிதீரங்களிலும் தங்கிப் பின் ஈரானுக்குள்ளும் மறுகிளை இமயமலைப் பகுதியினூடாய் பகவத்கீதை அட்டையில் காண்கின்ற அதேபடி தேரும் குதிரையுமாய் ஆயுதத்தோடு கி. மு. 1500 வருடங்கள்தொட்டு வந்து திராவிடரை மேற்கொண்டது. அப்போநாகரிகத்தின்உச்சத்திலிருந்த திராவிடரிடை மணப்பெண் களவாடி பெருகினர். அதன் பின்னர் தான் அவர்கள் ஸ்ரீன் ஏழு குழுக்களின் ரிஷிகளும் இருக்கு வேதத்தை எழுதினர். முந்தைய நாகரிகமாகிய அரப்பா, ராகிகிரியில் ஆரியருக்கான மரபணு இதுவரை காணவில்லை. இன்றும் அந்தணர் என்னும் தமிழ் ஐயர், ஐயங்காரிலும் தமிழகத்தில் மிகவும் குறைவாகவே ஆரியகலப்புள்ளதால் சாதிமதிப்பில் குறைந்தவர் என்றாகினர்.

ஆனால் திராவிடர்; தமிழகத்தில் 70,000 ஆண்டுகளேனும்வாழ்வதாய்(ஹிசுலுஆ130மரபணு) ஆய்வாளர்கள்காட்டியுள்ளனர்எதியோப்பியரொத்தஆ மரபணுக்கள் காணப்பட்டாலும், ஆரியர் வருவதற்கு 25,000 வருடங்கள் முன்னான தனித்துவமுடைய மரபணு திராவிடரிலேயே உண்டு. ராமகிருஷ்ணன் போன்ற தொல்லியலாளர் திராவிடக் கலாச்சாரம் தமிழகம், சிந்துசமவெளி எங்கும் ஒன்றிலொன்று ஊடுருவியிருக்கும் சான்றுகளுண்டென்கிறார். இலங்கைத் தமிழரும் சிங்களவரும் அறுபது வீதத்துக்கும்மேல்; அதே மக்கள் என்றும், சிங்களவரில் தமிழரிலும் கூடவாய் இந்தியத் தமிழ் மரபணு உண்டென்றும் காட்டப்பட்டுள்ளது. அதாவது இலங்கையிலும் ஆரியகலப்பு அரிது. புராதன கல்வெட்டுகளும் தமிழியென்பர்.

சைவம் என்றால் தமிழ், தமிழ் என்றால் சைவம் என்பது யாழ்ப்பாணத்தில் கோட்பாட்டு உறுதி பெற்றுறிருப்பதற்கு உதாரணம் யாழ்பல்கலைக்கழகத்தில் சைவரல்லாத தமிழர்; துணைவேந்தராய் பதவியமர்த்தப்பட்டதும் கொடும்பாவி எரித்ததாகும். அங்குகூட தமிழரின் மரபுப் பிரகாரம் வழிபாடு செய்யார். தமிழருக்கு இந்துக் கலாசாலை வேண்டுமென்றதால் கலாசாலை கிடைப்பதில் தாமதுமுமானது. ஏன் என்று யாரும் வினவுவதில்லை. சைவரின் சாமி பெயர்கள்; சங்க இலக்கியங்களில் பேசப்பட்டில்லை. தேவாரகாலத்தில் ஆரியமரபு தமிழரல்லாத அரசர்களால் நாடெங்கும் அரசின் மதமாக்கப்பட்டது. ஆதிதொட்டிருந்த தமிழர் வழிபாடுகள் அருகின.

ஆதிதிராவிடரின் வழிபாடு இயற்கை, தாய்த்தெய்வங்கள் பற்றியது. கிராமத்துக் காவல் தலைவர்கள் வணங்கப்பட்டனர். சிறுமலை சங்கிலிப்பாறை இடுக்கிலும் இந்தியாவின் ஜார்க்கன்டிலும் காணும் இந்துவேதங்ளுக்கும் முன்பான பாறை ஓவியங்கள், மற்றும் அக்கினி ஆற்றடியிலும், அரிக்கமேட்டிலும், மற்றும் சிந்துவிலும் தாய்த்தெய்வ வழிபாடு இருந்ததற்கு நாலாயிரம் வருடங்களுக்கும்மேலான சிற்பசான்றுகளுமுள்ளன. திராவிடரின் மண்வளத்துக்கான தாய்த்தெய்வம் தவ்வை என்றும், அரசியலுக்கு கொற்றவை (தா ஔவை என்பது கனம்பெற்ற பெண், கிழவி, கொற்ற ஔவை கொற்றம் என்பது அரசியல், வீரம்) வழிபாடு தொடக்கப் பல்லவ கற்கோயில் காலத்திலுற்கும் நீடித்தது. வரலாற்றுக்கு முன்னான தாய், ஏழுகன்னியர் வணக்கப் பாறை ஓவியங்களுள. இவற்றை சைவம் மேற்கொண்டதெவ்வாறு?

தேவார காலத்தில் சிவன் வணக்கத்தை முழுமுதலாய் நிலைநாட்டவென்று திராவிட பெண்தெய்வங்கள் அவரின் துணைவிகளாக்கப்பட்டனர். திராவிட தாய்வடிவத்தை தம் பார்வதியாயும், கொற்றவையைக் காளியாயும் மாற்றியதால் தவ்வையை வீசினர். பிராமணர் காடு, கிராமத்தை விட்டு அரசருக்கு கும்பிட நகரில் வதிந்தனர். பழையோள், செல்வி அதாவது கன்னி பௌத்தரின் பகவதி, கண்ணகி, மணிமேகலை என்றெல்லாம் சங்க இலக்கியத்தில் காணலாம். வேலன் என்பதும் குலத் தலைவன் ஸ்கந்த குமராவானது, பத்தினி வள்ளி த்தெய்வம் ஆரியரால் மணம்முடித்துக் கொடுக்கப் பட வள்ளியின் சக்தி கிராமத் தலைவனுக்கன்றி ஸ்கந்தஸவாமிக்கு இறங்குகிறது. திராவிடவேல் ஒதுங்கியுள்ளது. அதனால்தான் நல்லூரில் மத- அரசரான ஆதித் தமிழரசரின் சங்கிலித்தோப்பும் மறந்தது.

தமிழரசர்களின் கடன் திராவிடப் பெண்தெய்வங்களின் பணி. பெண்தெய்வத்தின் உருவின்இணைப்பால்அவளிடத்தில்கிராமத்தாருக்கு காவலாயும், நீதி, மதியுரை பகரவும் அரசுக்குரிய

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# யாழ்ப்பாணம் தமிழர் பூமியா?

4ம் பக்க தொடர்ச்சி...........

ஆற்றல் பெற்றனர். ஆதிவாசிகள், பழைய கதிர்காமம், சங்கிலித் தோப்பைப்போல் மௌனியாய் சித்தராய் சாமியோடமர்ந்து வனத்திலோர் ஆண்டியாய் ஆனந்த கூத்தும் பாட்டுமாய் மத-அரசன் வணங்குவான். இன்றோ அம்மரபு கவிண்டு கிராமத்தலைவனல்லஎவரும்தயார்படுத்தாமல்செயற்கையாய் மாம்சவீறுபெற்று ஒருங்கிணைப்பாடின்றி தத்தம்படியாடு, தீர்க்கதரிசனமற்று குறிசொல்வது காணலாம். சங்கிலியன் எனும் கறுப்புசாமி, சுடலைமாடன், கூத்தாண்டவன் எனப் பல குலதெய்வங்கள் வெளியில் வணங்கப்படுகின்றன. விஷ்ணுவின் அவதாரங்களையும், கதைகளையும், வாகனங்களையும், ஈராக்கின் பூர்வீக புராணங்களில் காட்டலாம். அவற்றினடியிலும் திராவிடரின் வரலாறுகளுள. மக்கள்அமெரிக்க கலாச்சாரமாகும்வேளையிதில்கிராம மற்றும் ஆதிவாசிகளின் சாமிகள் சமஸ்கிருதமயமாக்கப்படுவதேன்? பூசாரிகளை நிறுத்தி வழிபாட்டை பிராமணரிடம் கொடுப்பதால் எஞ்சியதமிழரடையாங்களும்அழிக்கப்படுகின்றன. தமிழிலும் ஓதலாமெனறால் ஆரியரின் ஜெபங்களைத் தான் தமிழில் ஓதல் பயிற்சி. கைமாற்றப்பட்ட தமிழரின் அடையாளங்களும், கவிகளும், கலைகளும் மறந்தனர்.

தமிழரிடை திராவிடமரபு, வைதீகமரபு என்று இரண்டு சமயங்களுள்ளன. வித்தியாசமென்ன? சங்க காலத்தில் கி. பி 300 வரை திணைகள் படி தமிழரின் தெய்வங்கள் பாடப்பட்டது. சிந்து சமவெளி மரபணுவுடைய இருளர், தோடர், குரும்பர் போன்ற ஆதிவாசிகள் தத்தம் மொழி பேசினும் அவர்கள் மரபணு ஆரியமற்ற சிந்து சமவெளியோடு சம்பந்தப்பட்டது என ராகிகிரி ஆய்வுகள் காட்டின. அவற்றை சுமெரியாவிலும் காணலாம். காடு, மேய்ச்சல் நிலத்துக்கு மாய், வயலுக்கு வேந்தன்;, கடல் பக்கம் நெடி மற்றும் வருணன், பாலைக்கு கொற்றவை என்பன முக்கிய சாமிகள். பின் சமஸ்கிருதமாக்கி சேய்ஸ்கந்தன்என்றும், மாய்கிருஷ்ணனென்றும், இந்திரனை வருணன் என்றும் கொற்றவையை கபாலங்களணிந்த காளியாகவும், ஆண்சாமிகளை தம் இறந்த சாமிகள் பெயருக்கும், குணங்களுக்கும் மாற்றினர். திராவிடரை சூத்திரரென கல்வியை மறுத்து புதிய மாற்றுத்தல புராணங்களையும் செல்லுமிடமெல்லாம் உருவாக்கி தமிழரின் தாய்வணக்க வனங்களில் கற்கோயில்கட்டி, ஆண்சாமிகளைப் பதியவைத்தனர். திராவிடரான தக்கன், இராவணனாதியோர் இந்திராவின் சோமா வெறியாட்டு, காளைப் பலி என்பனவற்றை எதிர்த்ததால் கலாச்சாரமற்ற அசுரரரென காட்டப்பட்டனர் என மறைமலையடிகள் காட்டியுள்ளார்.

தாய்த்தெய்வ விக்கிரகங்கள் எங்கே?

தாய்வழிபாட்டை முக்கியமாகப் பெண்களே நடத்தினர். ஆரியகலாச்சாரம் பெண்ணை மதிப்பதில்லை. பெண்கள் வேதம் கேட்பதோ முக்தி முயல்வதோ, பூசை செய்வதோ தடையாயிற்று. ஆரியத் தெய்வங்கள் ஆண்களாதலால் திராவிடரின் பெண் தெய்வங்களையெல்லாம் அவற்றின் மனைவிகளுக்குசக்களத்திகளாக்கினர். சாமிக்குகல்யாணமன்றி தனிவணக்கம் தடைப்பட்டது. உதாரணமாக, நூற்றெட்டு அசுரரை அழிக்க சிவபெருமான் அவர்கள் மனைவியரின் ஆரியபெண்பிள்ளைகளுக்குத் இயல்தந்தையானார். அவர்கள் தம்திராவிட தந்தையரை அழித்ததால் ஆரியதேவிகளின் அவதாரம்எடுத்ததாய்புராணித்துஅவர்களைஆரியசாமிகளுக்கு மனைவியராக்கி தமிழர் மரபை வேதியமாக்கினர். அவர்களின் சக்தி ஆண் தெய்வத்திலுறைகிறதென சித்தாந்தம் வகுத்தனர். பெண் தெய்வத்துக்குரிய பூர்வீகவனத்தில் கட்டிய கோயிலகளில் அவற்றை வேறு பெயர், வடிவோடு நடுவிலன்றி ஒதுக்கமாயர்த்தப்பட்டிருப்பது காணலாம். எனவே வருவாய் பேணப்பட்டது. திராவிடரின் அம்மன் பார்வதி அவதாரமாகி, கொற்றவை சிவனின் பிணம் மேலிருக்கும் காளியாகி நிற்பது திராவிட ஆரிய போர்களைக் காட்டுகிறது எனப்படுகிறது. தவ்வை போன்ற மூலத்தாய் வடிவங்களை அருவருக்கத்தக்க புராணமெழுதி கிராமத்துக்கு வெளியே போட்டனர். கூத்து முதலில் தாய்க்குரியது. அவளிடத்தில் குலதெய்வரான கூத்தாண்டவர் நடிகருக்கும், பிள்ளைப் பேற்றிற்கும், பாதுகாப்பிற்கும் காவல். ஆனால் சிவன் நடராசர் என்று 12ம் நூற்றாண்டில் உருவாக்கியபோது கதைமாற்றப்பட்டது. ஆரியமுதற் கடவுள் இந்திரனே ஆரியனொருவனை கொன்றதற்குத் தண்டனையாய் கூத்தாண்டவராய் அவதாரமெடுத்ததாரென புராணிக்கப்பட்டது. சைவ சமஸ்கிருத மயமாக்கல்; பாண்டிய அரசியின் ஒத்தாசையோடு தேவார காலத்திலேயே மாணிக்க வாசகர் போன்றவர்களால் முன்னேறியது. இந்து வேதங்களையேற்க மறுத்ததால் தமிழ் நாட்டில் வன்முறையால் ஆரியமற்ற சமயங்கள் அருகி, மறைவாகி பஞ்சாட்சரமும், திருவாசகமும்தான் வெளிப்பட ஒலித்தன. அதனால்தான் தமிழகத்தில் மக்கள் திராவிடம், சாமி ஆரியம் என்ற விசித்திரமுள்ளது.

மதராஸ் ஆளுநர் எலிஸ்துரை 1800களின் தொடக்கத்தில் தமிழ்சமஸ்கிருதமின்றிதனித்தியங்கக்கூடியசெம்மொழிஎன்று தெரிவித்து, அதை நிறுவ ஆதாரங்களுக்குத் தேடினார். அதன் முன் ஐரொப்பிய இந்தோவியல் அறிஞருக்கும் காலனித்துவ அரசாங்கக்களுக்கும் சமஸ்கிருதத்திலிருந்துதான் ஆங்கிலம் உட்பட சகல இந்திய மற்றும் இந்தோ ஆரிய மொழிகளும், எழுத்துக்களும் உருவாகின என்று பிராமணரால் கூறப்பட்டது. அக்கருத்து நிலையிலிருந்து இதுகால் எழமுடியவில்லை. ஆங்கிலேய கல்வி பயின்ற பெரும்பாலான இந்திய அறிஞரும் பிராமணராயிருந்தனர். அக்கருத்தின் அடிப்படையே ஆரியரின் இருக்கு வேததமாகும். பிராமணர் ரஷ்ய ஆண் மரபணுவுடைய வம்சாவழி. இந்து வேதங்களின்படி மும்மூர்த்திகள் சூறாவளி கடவுளான இந்திரன், அக்கினி, போதைவஸ்தான சோமாப் பூண்டு என்பனவே ஆரியரின் சொந்தக் கடவுளர். அவர்களின்; சுலோகங்களும், அதர்வசாபங்களும் இடையராயலைந்தபோது சூறாவளியையும் பின் இந்தியவுட்புக திராவிடரையும் அழிக்கவும் இந்திரனுக்குப் பலியிடும்போது பாடப்பட்டன. இந்திரனுக்கு முந்நூறு பானை சோமாவும் ஆயிரக்கணக்கான காளைகளும் பலியுணவாய் திராவிட அரசர்களிடம் பெற்றனர். இருக்கு வேதம் சோமாவை வணங்குகையில் ஓதுவதாவது "நாம் சோமாவைக் குடித்துள்ளோம். ஆதனால் நித்தியஜீவிகளாயினோம். தெய்வங்களுக்குரிய ஒளியை அடைந்துவிட்டோம்" (இருக்கு வேதம்; டி. எஷ்ஷ்ஷ் 48.3). ஆனால் தமிழரின் கலாச்சாரம் முற்றிலும் வேறு.

சிந்தில்கூட ஆரிய மரபணு இல்லை. எனவே சிந்துநாகரிக காலத்தில் தமிழரிடை ஆரியர் சேர்ந்திருந்தது சாத்தியமில்லை. இங்கு பெருமாள் கிருஷ்ணர் அவதாரத்தில் இடையர் என்று காட்டும் வகையில் கதை உருவாக்கப்பட்டது. அதனால் கோயிலுக்குமுன் திருப்பதி, தில்லைவனம் என்ற சிதம்பரம் தாய் வணக்க வெளியாயிருந்த அடையாளம் அழிக்கப்பட்டுள்ளது. தாய்க்குரிய திராவிட சாமிகள் அங்கு ஆரிய பெருந்தெய்வங்களுக்கு காவலாக வெளியே சிலையாய் அல்லது கோபுரத்திலிருந்து முழிக்கின்றது. சிங்கத்தோடமர்ந்தவை பல்லவ மரபின. சுமெரிய காலதெய்வமான சுவன் கோயில் மரபை பல்லவர் பேணுகின்றனர்.

ஆதிஆரியத்துக்கும்தமிழகதிராவிடத்துக்கும்மரபணுவிலோ, வழிபாட்டிலோ தொடர்பில்லை. ஆனால் திராவிட வழிபாடுகள் பிராமணமயமாக்கப்படுகின்றன. குலதெய்வ பூசாரிகளான அந்தணரின் இடம் பிராமணருக்கு இந்திய அரசாலே மாற்றப்படுகிறது. இதனால் நம் பூர்வீக சாமிகள் திரிபாகி, ஆரியராய் மீளுருவாக்கப்படுகின்றன. நல்லூரின் கந்தனின் கதையும், வெள்ளைநிறமும், வள்ளியின் சக்களத்திநிலை, தாய்த்தெய்வத்தின் மகனை எடுத்து இருவரையும் சிவனுக்கு குடும்பமாக்கியது தமிழர் வழக்கு அழிக்கப்பட்டதன் வெளிப்பாடாகும். அப்படி வணங்குவது சற்சூத்திரராய் சாதியேற்றம் என்றதால், வேல் இன்று மறைவாயுள்ளது.

இமயமலை கடந்து இந்தியாவுக்குள் வந்தபின் ஆசாரம் மாறியது. விவசாய உபரிகண்டு வேதமோதுதல் விலங்குப்பலி கிடைக்கும் வனவாசத்தைவிட இலகெனக் கண்டதும் அங்கு

தொடர்ச்சி 7ம் பக்கம்...........




# ஊடக பணியாளர் மீது தாக்குதல் நடத்திய இருவர் யாழ்ப்பாணப் பொலிஸால் கைது

யாழ்ப்பாணத்தில் ஊடக பணியாளர் மீது தாக்குதல் மேற்கொண்ட இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ்.நகரின் மத்தியில், கஸ்தூரியார் வீதியில் கடந்த வெள்ளிக்கிழமைகுறித்ததாக்குதல்சம்பவம்இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து இயங்கும் தொலைக்காட்சி ஒன்றில் தொழிநுட்பவியலாளராக பணியாற்றும் விபூஷண் என்பவர் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதலுக்குஇலக்கானவர்வீதியில்மோட்டார்சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த வேளை , பின்னால் பிறிதொரு மோட்டார் சைக்கிளில் வந்த நபர்கள் அவரை வழி மறித்து , ஏன் தாங்கள் முந்தி செல்வதற்கு வழி விடவில்லை என கேட்டு , தலைக்கவசத்தால் மிக மோசமாக தாக்கி விட்டு அங்கிருந்து தப்பி சென்றுள்ளனர்.

தாக்குதல்தொடர்பிலானவீடியோகாட்சிகள்கடைஒன்றில் பொருத்தப்பட்டிருந்த சிசிரிவி கமராக்களில் பதிவாகியுள்ளது.

அதன் அடிப்படையில் பொலிஸார் தாக்குதலாளிகளை இனம்கொண்டுள்ளநிலையில்அவர்களைகைதுசெய்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்தனர்.

அந்நிலையில் அவர்கள் இருவரும் தலைமறைவாகி இருந்த நிலையில், திங்கட்கிழமை யாழ்ப்பாண பொலிஸார் இருவரையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் ஓட்டுமடம் மற்றும் தாவடி பகுதியை சேர்ந்த இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர்களிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (05)

# நாட்டில் குடிசன மதிப்பீடு கணக்கெடுப்பு ஆரம்பம்

2024 ஆம் ஆண்டுக்கான குடிசன தொகை மதிப்பீடானது திருகோணமலை தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவில் திங்கட்கிழமை பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

தம்பலகமம்பிரதேசசெயலகபிரிவில்உள்ளபுதுக்குடியிருப்பு கிராம சேவகர் பிரிவில் குறித்த குடிசன தொகை மதிப்பீடு இடம் பெற்றது.

இக்கணக்கெடுப்பானது இலங்கையில் மேற்கொள் ளப்படுகின்ற 15 ஆவது மக்கள் தொகை கணக்கெடுப்பு என்பது குறிப்பிடத்தக்கது.

இதில் தம்பலகாமம் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன் உட்பட வெளிக்கள உத்தியோகத்தர்கள், குடிசன மதிப்பீட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் என பலரும் கலந்து கொண்டனர்.(05)

# தேசிய நல்லிணக்கத்திற்கான செயற்றிட்ட உருவாக்க ஆய்வு

## யாழ்ப்பாணம் செயலகத்தில் நடந்தது



தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகத்தின் ஏற்பாட்டில் தேசிய நல்லிணக்கக் கொள்கை மற்றும் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகத்தின்செயற்றிட்டம்உருவாக்கலுக்கானஆலோசனைச் செயலமர்வு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமான மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் திங்கட்கிழமை யாழ்ப்பாண மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன் போது கருத்து தெரிவித்த அரசாங்க அதிபர், இன,மத, மொழி, சமூக,பொருளாதார, அரசியல் சமத்துவத்தை பேணுவதற்காக இவ் அலுவலகம் செயற்படுவதாகவும், 2024 ஆம்ஆண்டுபாடாளுமன்றம்ஊடாகசட்டம்அமுல்படுத்தப்பட்டது எனவும், இச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் எல்லோரும் எவ்வித வேறுபாடுகளின்றி சமமானவர்கள் என்ற நோக்கத்தை அடைய முடியும் எனவும் குறிப்பிட்டார். மேலும் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது தேசிய ஒற்றுமையை வலுப்படுத்த முடியும் எனவும் தெரிவித்தார்.

இச்செயலமர்வில்வடக்குமாகாணத்தின்05மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் தலா 05 பிரதிநிதிகள் வீதம் பங்குபற்றினார்கள்.

இச் செயலமர்வில் மதகுருமார், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகத்தின் பிரதிப்பணிப்பாளர் உதவிப்பணிப்பாளர்கள், வடமாகாண தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகத்தின் வடக்கு மாகாண மாவட்ட உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.(05)



# 14 வயது பாடசாலை மாணவி பிரதமரிடம் மனு கையளிப்பு



பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவை நேரில் சந்தித்து14 வயதுடைய மாணவி ஒருவர் மனு ஒன்றைக் கையளித்துள்ளார்.

பாத்திமா நடா என்னும் மாணவியே திங்கட்கிழமை பிரதமர் அலுவலகத்தில் வைத்து மனுவை ஒப்படைத்துள்ளார்.

குறித்த மாணவி, காத்தான்குடியிலிருந்து கொழும்புக்கு சைக்கிளில் பயணித்து பிரதமர் அலுவலகத்தில் சென்றே இந்த மனுவை வழங்கியுள்ளார்.

அந்த மனுவில், சிறுவர்கள் மற்றும் இளைஞர்களை பாதித்துள்ள போதைப்பொருள் பாவனைக்கு எதிராக உடன் நடவடிக்கை எடுக்குமாறும் சிறுவர்கள் மீதான தவறான நடவடிக்கைகளை தடுக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(05)

# மதுபானசாலை அனுமதி பெற்றவர்களின் விவரங்களை ஜனாதிபதி அனுர பொதுத்தேர்தலுக்குமுன் வெளியிடுக

## சரவணபவனும் கோரிக்கை

மதுபானசாலைக்கான அனுமதி பெற்றவர்கள் எவரும் எமது அணியில் இல்லை எனத் தெரிவித்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், மதுபானசாலை அனுமதி பெற்றவர்களின் விவரங்களை ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்னர் வெளியிட வேண்டும். - என்றார்.

ஜனநாயக தமிழ் அரசுக் கூட்டமைப்பு என்ற பெயரில் யாழ்ப்பாணதேர்தல்மாவட்டத்தில்சுயேச்சையாகபோட்டியிடும் வேட்பாளர் சரவணபவன் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு இவ்வாறு தெரிவித்தார்.



அவர் மேலும் கூறுகையில் -

மக்கள் பக்கம் இருப்பதாக கூறும் அனுர குமாரதிஸாநாயக்கஇன்னமும்மதுபானசாலை அனுமதிப்பத்திரத்தை பெற்றவர்களின் விவரங்களை வெளியிடாமல் வைத்துள்ளார்.

தேர்தலுக்கு பின்னர் தான் பார் பெமிட் பட்டியல் வெளிவருமோ தெரியவில்லை.

மதுபானசாலை அனுமதிப்பத்திரங்கள் உண்டு என்பது புலனாகிறது. சிலரிடம் இருக்கிறது. சிலர் இல்லை என்று சொல்லிக்கொள்கின்றார்கள். சிலர் வேறு பெயர்களில் மாற்றி வைத்திருக்கின்றார்கள். எத்தனையோ விடயங்கள் நடந்தேறிவிட்டன. பணப்பரிமாற்றங்களும்நடந்துமுடிந்துவிட்டன.


தேர்தலுக்குப் பின்னர் அனுர குமார திஸாநாயக்க பெயர் விவரங்களை வெளியிடுவதால் எந்த பிரியோசனமும் இல்லை.

நீங்கள் தெற்கில் மட்டுமல்ல, வடக்கு, கிழக்கு என எங்கும் ஊழலற்ற ஆட்சியை நிறுவுவதாக இருந்தால் உண்மையை வெளியிடுங்கள். - என்றார்.(05)




# ரயில் - லொறி மோதி விபத்து

## ஒருவர் காயம்



தேயிலை கொழுந்துகளை ஏற்றிச் சென்ற லொறி ஒன்று ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளானதில் லொறியின் உதவியாளர் ஒருவர் காயமடைந்து கொட்டகலை பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

ஹற்றன் யூனிபீல்ட் தோட்டத்தில் இருந்து தேயிலை தொழிற்சாலைக்கு தேயிலை கொழுந்துகளை ஏற்றிச் சென்ற லொறி ஒன்று ஹற்றனிலிருந்து இருந்து எல்ல நோக்கிப் பயணித்த ரயிலுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

விபத்து இடம்பெற்ற இடத்தில், ரயில் பாதுகாப்பு கடவை காணப்பட்டாலும் அதற்கு காவலாளி இல்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின் போது, லொறியின் சாரதி, ரயில் முன்னோக்கி வருவதை கண்டு லொறியை பின்னால் செலுத்த முற்பட்ட போது லொறியானது ரயிலுடன் மோதியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது, லொறியின் பின்புறத்தில் தோட்டத் தொழிலாளர்கள் ஐவர் பயணித்தனர் எனவும், விபத்தில் லொறியின் உதவியாளர் ஒருவர் காயமடைந்துள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து காரணமாக லொறியின் முன்பகுதி பலத்த சேதமடைந்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இதனையடுத்து, ரயில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் காயமடைந்தலொறியின்உதவியாளரை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றதுடன் ரயிலை முன்னோக்கி செலுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (05)

# யாழ்ப்பாணம் தமிழர் பூமியா?

4ம் பக்க தொடர்ச்சி...........

இந்திரசாமி செல்வாக்கிழந்தான். மேலுமங்கு காளைகளல்ல எருதெனக் கண்டு நெயபெற பசு பெற்று ஓமக்குண்டங்கள் கட்டி வெற்றி, மோட்ச வாழ்வு கேட்டு பெருயாகம், குதிரை பலி என்று; அரசனைச் செய்ய வைத்தனர். சாமிகளையிணைத்து அக்னி- இந்திரா என்று புதுப்பெயரிட்டனர். பின் போர்ச் சமுதாயத்தின் செல்வாக்கைக் கண்டு தாண்டவ உருவில் அக்னி-இந்திரா தெய்வத்தை அக்னி-ருத்ரா சாமியாக்கினர். இமயச்சாரலில் முக்கியமாகப் பெண்பிள்ளைகளை பீடித்த நோய்களுககுக் காரணமாக ஸ்கந்தா, குமரா என்ற மலைஆவிகளைப் பலியிட்டு சாந்திப்படுத்தி கெட்ட ஆவிகளை வெல்ல மன்றாடினர். பின் ஸ்கந்தா போர்வடிவில் யாவணர் மற்றும் வீரருக்குப் தெய்வமாக மாற்றினர். வேலன்சாமி திராவிடரின் கன்னித்தெய்வம் வல்லியைக் கணத்தின் தலைவனை தடையாய் வைத்து சேர்ந்தானென்றும் அவரை பெண்தெய்வம்; பார்வதி மகனான சோமா ஸ்கந்தா என்ற தம் இறந்த தெய்வத்தோடு இணைத்து முருகன் என வேலனை மேற்கொண்டனர். திராவிடப் பெண்தெய்வம் சக்களத்தியாகி இரு மனைவி முறையைக் காட்டினர். அவ்வாறே திணையின் சாமிகளும் அடையாளம் மாறி ஆரிய தெய்வங்களாயின. இப்படி காலத்துக்கேற்ப சாமிகளை மாற்றி சமுதாயத்துக்கேற்புடையதாக தம் ஆசாரங்களையும் மாற்றினர். அரசன் சாதியில் பிராமணரின் கீழானதால் கேள்வி சாத்திரப்படி மறுக்கமுடியவில்லை. அரசன் எவ்வழி, குடிகளும் அவ்வழி என்ற மகுட வாக்கே சங்கிலியரசன் கத்தோலிக்கத்தை மறுதலிக்க மறுத்த தன் மகனாதியாரைக் கொல்லும் போது கொடுத்த மறுமொழி என்று காணலாம். இன்று அதே செம்மண்ணில் அங்லிகன் குரு வைதீகத்தைப் புகுத்துகிறார்.

இன்று தமிழ்ப் பிள்ளைகள் தம் அடையாளத்தை அறியார். ஒரு தலைமுறை போதும் தமிழ்த்தெய்வ மரபு மறைவதற்கு. இன்று கிராமங்களில் பாட்டிக் கதைகளாகவே தமிழர் சமயத்தைப் பேணுகின்றனர். திராவிட சாமிகள், புராதன பாரம்பரிய இயல், இசை, நாடகமெல்லாம் தாழ்ந்த சாதிகளின் அடையாளமென்றும், தெய்வங்களில்லை எனவும் பழிக்கின்றனர். தமிழரின் யாவரும் கேளிர் என்ற சர்வதேச நோக்கை மறுத்து பிராமணர் இயற்கையான மனித மாண்புக்கெதிராக வகுத்த சாதியையே இனத்துக்கு மேலாய் ஆமோதிக்கின்றனர். ஆதனால் சாதியம் திராவிட இன ஒடுக்குதலின் மறைவான உத்தி எனலாம். தமிழரின் அடையாளத்தை மீட்க திராவிடரின் சாமிகளின் கருத்தை விளங்குவது அவசியம்.

திராவிடர் கலாசாரம், மொழி, நெறியில்லாதவர் என்கிற வேதசுலோகங்கள் தமிழ்மொழி ஆரியமுனி அகஸ்தியர் தந்தது என்றும் அவர் கமண்டலத்தைக் காகம் தட்டி செல்லக்கூடாத சூத்திரதேசத்துக் காவேரியாறு புனிதமானது என்ற விளக்கங்களும் சிங்கள தலபிரச்சாரங்கள் போல் இன மறைப்புக்கு வழியிடும். தமிழரின் பாரம்பரிய வழிபாடு பற்றி யாழப்பாணத்தார் அக்கறை காட்டாதது அவர்கள் தமிழ அடையாளத்தை மறந்து பூரண சமஸ்கிருதமயமாக்கப்பட்டுள்ளமை எனலாம். தமிழ்நாட்டின் அடையாள விளிப்பு இங்கும் பரவுமா?

நாவலர் பைபிளில் சைவவழிபாடு உண்டென்றார். இன்று இயேசு கற்க இந்தியா வந்தார் என்பதும் புனைகதை. பதிலை பைபிளிலேயே காணலாம். இயேசுவழி வைதீகமல்ல. ஆனால் கிறிஸ்தவத்திலும், திராவிடத்திலும், வைதீகத்தின் ஆரிய திரிபிலும் அதே சில ஆசாரங்களுள்ளன. எப்படி? அதற்கான சாத்தியத்தை மரபணு ஆய்வுகளில் காணலாம். தமிழகத்திற்குரிய மரபணுவுடையோர், அதாவது திராவிடர் மெசப்பத்தேமியாவில் 10,000 வருடங்களுக்கு முன்னிருந்த மக்கள் குழுவில் காட்டுகிறது. சிந்து மரபணு தமிழகத்தின் ஆதிவாசிகளில் காட்டுகிறது. அதாவது தமிழகம், சிந்து, மெசப்பத்தேமியா மூன்று மக்களுக்கும் உறவுமுறை இருந்திருக்கின்றது. உலகத்தின் முதலாவது எழுத்தில் பதியப்பட்ட சமயம் சுமெரியமாகும். இயேசுவின் மூதாதையர் சுமெரியாவின் ஊர் என்ற ஊரினர். அடுத்த ஊர் ஈளம், மாரி. சுமெரியர் கருந்தலையர் எனப்பட்டனர். சுமெரிய சாமிகள் தமிழ் சாமிகளே என்று கருதப்படக்கூடிய அளவுக்கு பல விக்கிரகங்களும் ஆசாரங்களும் ஒத்துள்ளன. எனவே சுமெரிய சாமிகளை வைத்து தமிழரினதும் சிந்துசமவெளியினதும் சாமிகளளை விளங்கலாம். ஆரியர், மற்றும் ஈரானிய சாமிகள் பின்னைய பாபிலோன் மரபுக்குரியன. பாபிலோன் சுமெரியாவை அழித்து அதன் சாமிகளை சுக்குநூறாக்கினாலும் சுமெரிய மரபை எடுத்துத் திரித்தது. ஆரியர்களின் இனமும் சமயமும் பாபிலோன், அதையாண்ட இரானோடு கலந்ததாகும். இதனால் வரலாற்றின் முதற் கலாசாரமான சுமெரிய மரபு, திராவிடம் என்பன முன்னையவை.

சுமெரியாவின் முதன்மைத் தெய்வம் நம்மா (புனித அம்மா). அவள் மரபு 10,000 வருடங்களுக்கு முன் யோர்தான், ஹரப்பா, மற்றும் தமிழகத்தின் அக்கினி ஆற்றுப் பகுதிகளில் கண்டெக்கப்பட்ட அதே வடிவமுடையது: பரந்த மார்பு, இடுப்பு, தொங்கும் காதணி, ஒமேகா வடிவக் கொண்டை எங்கும் பொது. சுமெரிய சாமிகள் கரிய டியோடரைட்கல் அல்லது எரிலைக் கல்லால் சுமெரிய கருமை அதாவது திராவிட கறுப்பு விக்கிரக உதாரணம் தவ்வை, எனச் ஒதுக்கப்பட்டு நீரில் கண் வெட்டப்படும். இயேசுவின் வரலாறு தொடங்கும் ஊரான ஊரின் முதன்மைத் தெய்வம் ஊர் ந அம்மா. சுமெரியா விவசாயம், வெள்ளநீரின் ஆளுமை, விருத்தி, கரப்பத்தோடு சம்பந்தமான சந்திர வழிபாடுடையது. நம்மா நித்திய கன்னித்தாய். கற்புக்கு அரசி. களிமண்ணிலிருந்து சகல சிருஷ்டிகளையும் படைத்து அவைகளுக்குள் உயிரை ஊதினாள். அவளே விவசாயத்தின் தெய்வம். பசுவும் பருகும் கன்றும், தவ்வை போல் தானியக் கற்றைக் கொத்து, தர்ப்பை, நாணல் வகை, கதவடி நாணல்நுனியில் வளைத்த தாய்ச்சுழி (பிள்ளையார் சுழி என்பரின்று) என்பவற்றால் கட்டிய தோடர் இருளர் கோயில, வெளி, வனம், தோப்பு யாவும் தாயின் சின்னம். அவளுக்கே உலகில் முதல் படிப்படி மேடுகளில் நாணல் குடில் (பல்லவ கோயில் உச்சம்) கோபுரக்கோயில் கட்டப்பட்டது. அவள் படைத்த முதல் மக்கள் என் கி, இன் அன்னா. இன் அன்னா பெண்லட்சணம் சகலமும் கொண்டவள். முதலில் ஒரு இடையனைக் காதலித்தாள். பின் சுமெரியர் விவசாயிகளானபோது தாய், அண்ணன் விருப்பமாய் துமளியை மணந்தாள். அவள் காரணமாய் அவன் இறக்க இன்னன்னா பாதாளத்திற்குப் போய்ப் பேசி அவனை மீட்டாள். இன்னன்னா காமியாகவும், வலிமைமிக்க போரக்குணமுடையவளாயம்; இதனால் காலப்பருவக்கிரமமாய் வழிபடப் பட்டாள். இவளால் புசிக்கட்டுவதும், களவுமுறைக் கலயாணமும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால் ஆதி மரபு களவுக் கல்யாணமல்ல. இக்காலங்கள் சிறு பெண்பிள்ளைகள் திருவெம்பாவை போன்ற சுமெரியாவின் சூரிய அழைப்பு பாடும் மாரிஇருள், மற்றும் சூரியஒளியுள்ள காலங்களால் குறிக்கப்படும். செதுவனா என்ற இளவரசி தலைப்பாகட்டி, பூமுடித்து, இடது தோள் தாவணி, பக்திவாசகங்களெழுத சுமெரியர்ஸ்வரத்தோடுபாடினாள். என்கிவான் தெய்வமாதலால் அங்குறையுமாவிகளுக்கும் தெய்வம். பூசாரி நிர்வாணி. சுமெரியமுறைப்படியே தமிழரின் விக்கிரகங்களையும் வாசிக்கலாம்.

ஆரியர் மரபு ரஷ்யா, மத்திய ஆசியா மற்றும் ஈரான், பாபிலோனிய அம்சங்களுடையது. பாபிலோன் சுமெரியாவை அழித்து சுமெரிய கோயில்மரபைத் தன் போர் மனப்பாங்கிறகேற்ப மாற்றியது. இந்து சமயத்தின் ருத்ரா, காளி வடிவம், இரானின் அவெஸ்தா ஹர த்வா, (சமஸ்கிருதம் சரஸ்வதா, தேவி), சிவன் சிவகாமி, இருமக்கள் பாரசீகரின் சோராவஸ்திரசமய வடிவினது. இன்றைய யாழப்பாணத்து வழிபாடு வைதீகமென்று நாவலர் தொட்டு பெருமைபேசுகின்றனர். அதனால் தான் தமிழரின் சங்கிலித் தோப்புக் கைவிடப்பட்டு நாசமாக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் தமிழ் என்றால், இங்கு திராவிடத்துக்கு ஏன் இடமில்லை?




காலைக்கதிர் Kalaikkathir

# கவிழ்ந்தது லொறி

திருகோணமலை -மட்டக்களப்பு பிரதான வீதி பாலத்தோப்பூர் பகுதியில் சாரதியின் கவனயீனத்தினால் வாகனமொன்றினை முந்தி செல்ல முற்பட்ட லொறி வீதியை விட்டு விலகி கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்து சம்பவம் திங்கட்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பில் இருந்து திருகோணமலை நோக்கி வந்து கொண்டிருந்த லொறி பாலத்தோப்பூர் பகுதியில் மற்றுமொரு வாகனத்தினை முந்திச் செல்ல முற்பட்டபோது இவ்விபத்து ஏற்பட்டதாகவும் ஆரம்பகட்ட விசாரணை மூலம் தெரிய வந்துள்ளது.

இவ்விபத்தில்எதுவிதசேதங்களும்ஏற்படவில்லையெனவும் தெரிய வருகின்றது.

தற்போது திருகோணமலை மாவட்டத்தில் மழை பெய்து வருகின்றமையால் வாகன சாரதிகள் மிகவும் கவனமாக வாகனங்களைசெலுத்தவேண்டும்எனவும்வீதிவிபத்துக்களை தடுக்கும் நோக்கில் போடப்பட்டிருக்கின்ற பதாகைகளை பார்த்து கவனமாக வாகனங்களை செலுத்த வேண்டும் எனவும் போக்குவரத்து பொலிஸார் வாகன சாரதிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.(05)

## பொருளாதார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிக்கோளாக கொண்டு 2024.10.01 திகதியிலிருந்து அமுலாகும் வகையில் 06 மாத காலத்துக்கு பின்வரும் நிவாரணங்களை வழங்குவதற்காக விவசாய, காணி, கால்நடை வள, நீர்ப்பாசன, மீன்பிடி மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

1.எரிபொருளாக டீசல் பெற்றுக்கொள்ளும் மீன்பிடிக் கலங்களின் உரிமையாளர்கள் பெற்றுக்கொள்ளும் ஒரு லீற்றர் டீசலுக்கு 25 ரூபா பணம் கிடைக்கும் வகையில் ஒரு மாதத்துக்கு 3,00,000ரூபா வரையான உச்ச எல்லைக்குள் 'மீன்பிடித்துறையை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்கான கொடுப்பனவு' வழங்குதல்.

2.எரிபொருளாக மண்ணெண்ணை பெற்றுக்கொள்ளும் மீன்பிடிக் கலங்களின் உரிமையாளர்கள் பெற்றுக்கொள்ளும் 15லீற்றர் மண்ணெண்ணைக்கு 25ரூபா பணம் கிடைக்கும் வகையில் ஒரு மாதத்தில் ஆகக்கூடியது 25நாட்கள் என்ற அடிப்படையில், தொழிலில் ஈடுபடும் நாட்களுக்கு மட்டும் வரையறுக்கப்படும் வகையில் ஒரு லீற்றர் மண்ணெண்ணைக்கு 25ரூபா 'மீன்பிடித்துறையை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்கான கொடுப்பனவு' வழங்குதல்.

3.டீசல் மற்றும் மண்ணெண்ணை விலைத் திருத்தம் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் டீசலுக்கான உச்ச நிவாரண விலை 250ரூபா மட்டத்திலும், மண்ணெண்ணைக்கான உச்ச விலை 150ரூபா மட்டத்திலும் ஆக்க்கூடியது 06 மாத காலம் வரை டீசலுக்காக ஆக்ககூடியது சந்தை விலையிலிருந்து 7.5சதவீதம் நிவாரணமும், மண்ணெண்ணைக்கு ஆக்ககூடியது சந்தை விலையிலிருந்து 12.5சதவீதம் நிவாரணமும் மீனவர்களுக்கு கிடைக்கும் வகையில் வழங்குதல் என்ற மேற்குறித்த நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துதல்.

## தபால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அட்டைகளின் விநியோகம் சம்பந்தமாக ஏற்கனவே உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதன்படி, தபால் மூல வாக்காளர்கள் மாவட்ட செயலக வளாகத்திலுள்ள அனைத்து அலுவலகங்கள், தேர்தல் அலுவலகங்கள் மற்றும் பொலிஸ் நிலையங்களிலும் 2024.10.30 மற்றும் 2024.11.04 ஆம் திகதிகளில் வாக்களிக்க முடியும்.

இத்தினங்களில் தபால் மூல வாக்களிக்க முடியாத வாக்காளர்களுக்கு 2024.11.07 மற்றும் 08 ஆகிய தினங்களில் தாம் பணிபுரிகின்ற இடம் அமைந்துள்ள மாவட்டத்தின் மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களில் அஞ்சல் வாக்கு அடையாளமிடுவதற்குவாய்ப்புஏற்படுத்திக்கொடுக்கப்பட்டுள்ளது. 2024 பாராளுமன்றத் தேர்தலுக்கான உத்தியோகபூர்வமான வாக்காளர் அட்டைகளை 2024.10.26ஆம் திகதி விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

உத்தியோகபூர்வமான வாக்காளர் அட்டைகளை விநியோகிப்பதற்கான விசேட தினமான 2024.10.27, 31 மற்றும் 2024.11.03 ஆம் திகதிகளில் அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன், உத்தியோகபூர்வமான வாக்காளர் அட்டைகளின் விநியோகம் 2024.11.07 ஆம் திகதி முடிவடையும்.

2024.11.07 ஆம் திகதிக்குப் பின்னர் உத்தியோகபூர்வமான வாக்காளர் அட்டைகள் கிடைக்கப்பெறாத வாக்காளர்களுக்கு 2024 தேருநர் இடாப்பில் பதிவுசெய்யப்பட்ட முகவரிக்கு உரிய அஞ்சல் அலுவலகத்திற்குச் சென்று தனது ஆளடையாளத்தை வெளிப்படுத்திய பின்னர் உத்தியோகபூர்வமான வாக்காளர் அட்டையைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# நுவரெலியாவில் பாழுதடைந்த நிலையில் மற்றுமோர் அரச வாகனம் கண்டுபிடிப்பு



முன்னால் போக்குவரத்து அமைச்சுக்கு சொந்தமான வாகனம் ஒன்று பாழடைந்த இடத்தில் மறைத்து விடப்பட்ட நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டிந்ததை திங்கட்கிழமை நுவரெலியா பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்; என நுவரெலியா பொலிஸ் நிலைய சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவ்வாகனம் நுவரெலியா பதுளை பிரதான வீதியோரத்தில் அமைந்துள்ள நுவரெலியா வலயக் கல்வி அலுவலகத்துக்குச் சொந்தமான கட்டடத்திற்கு அருகில் மறைத்து விடப்பட்ட நிலையில் கண்டுபிடித்துள்ளனர்.

குறித்த வாகனம் பல வருடங்களாக ஒரே இடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் தற்போது முன் பக்க இலக்கத்தகடு இன்றியும் பின் பகுதியில் மாத்திரம் இலக்கத்தகடு உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த ஜீப் வாகனமும் மற்றுமொரு ஜீப் வாகனமும் நுவரெலியா மாவட்டத்தை பிரதிநித்துவப்படுத்தும் அமைச்சர் ஒருவரின் தனிப்பட்ட தொடர்பு அதிகாரியின் பாவனைக்காக அமைச்சரால் வழங்கப்பட்டதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

எனினும் இதனுடன் தொடர்புடைய மற்றொரு ஜீப் வண்டியை கண்டுபிடிக்க பொலிஸ் அதிகாரிகள் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

நுவரெலியா பிரதேசத்தில் அரச வாகனங்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல்களின் போது இவ் ஜீப் வண்டி கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் அதிகாரி மேலும் தெரிவித்தார்.(05)

# தமிழர்தாயக பிரதேசத்தை போதைக்கு அடிமையாக்குவதே அரசின் நோக்கம்

## காங்கிரஸ் வேட்பாளர் காண்டீபன் சுட்டிக்காட்டு




'வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்தை போதைக்கு அடிமையாக்கி மக்களின் விடுதலை சிந்தனையை மழுங்கடிங்கும் வகையிலே அரசாங்கம் செயற்பட்டுவருகிறது' என அகில இலங்கை தமிழ்காங்கிரஸ் வேட்பாளர் சட்டத்தரணி நடராஜா காண்டீபன் தெரிவித்தார் .

வலிகாமம் வடக்கு தையிட்டி பகுதியில் மதுபானசாலை அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து தெல்லிப்பழை பிரதேச செயலகத்திற்கு முன்பாக வலிகாமம் வடக்கு சிவில் சமூக அமையத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போது இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

'வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்தை போதைக்கு அடிமையாக்கி மக்களின் விடுதலை சிந்தனையை மழுங்கடிங்கும் வகையிலே தென்னிலங்கை அரசுகள் இளைஞர்களை தவறாக வழிநடத்தும் போக்கில் சிங்கள பௌத்த பேரினவாத அரசின் நிகழ்ச்சி நிரல் தொடர்ச்சியும் நீட்சியுமாக வலிகாமம் வடக்கை குறிவைத்து போதை வியாபாரத்தை முன்னெடுக்கிறது.

வலிகாமம் வடக்கை பொறுத்த வகையில் மதத் தலங்கள் ,இந்து கிறிஸ்தவ கோவில்கள், பிரபல்ய பாடசாலைகள் என இருக்கும் வளமான மண்ணில் குறிப்பாக 'மண்ணை வளமாக்கு போதையை பிணமாக்கு' என்று கூறும் நிலையில் வலிகாமம் வடக்கில் போதையை விதைக்கும் வகையில் மது நாட்டுக்கும் வீட்டுக்கும் கேடு ,புகைபிடித்தல் உடல் நலத்திற்கு கேடு என்று விளம்பரப்படுத்தி வியாபாரத்தை செய்து அரசாங்கம் இலாபம் ஈட்டிவருகிறது .

பொலிஸ்நிலையங்களுக்குமாலைவேளையில்சென்றால் மதுவாடைக்குள் தான் இருக்கவேண்டியுள்ளது . காலை சென்றால் விடியாத முகத்துடன் பொலிஸார் இருப்பதை பார்க்கக்கூடியதாகவுள்ளது.

போதை பொருள்கள் ,பாவனையை நீக்க வேண்டும் என்றால் முதலில் பொலிஸார் ஒழுக்கசீலர்களாக இருக்கவேண்டும் .

அரசாங்கத்தின் திட்டமிட்ட இன அளிப்பின் அங்கமாக போதைக்கு எதிராக வடக்கு கிழக்கு தமிழர் தாயக பகுதியில் நாம் இணைந்து போராடவேண்டும். - என்றார்.(05)

# ஆயுர்வேத வைத்தியரின் கழுத்தில் இருந்த சங்கிலியை பறித்துச்சென்ற சிப்பாய் கைது

வெலிஓயா, பராக்கிரமபுர பிரதேசத்தில் வாகனம் ஓட்டுவதற்குப்பயிற்சிபெற்றுக்கொண்டிருந்த ஆயுர்வேத பெண் வைத்தியர் ஒருவரின் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியைப் பறித்து மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றதாகக் கூறப்படும் இராணுவ சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என வெலிஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார்சைக்கிளில்பயணித்தநபரொருவர்வீதியிலிருந்த பெண் ஒருவரின் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியை பறித்துச் செல்வதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து, பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் மோட்டார் சைக்கிளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெலிஓயா பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடைய இராணுவ சிப்பாய் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வெலிஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# துணைவிமானியை வெளியே தள்ளி விமானியறையைப் பூட்டிய விமானி

## ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸில் சம்பவம்

ஆஸ்திரேலியாவின் சிட்னியிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்துக்கொண்டிருந்த ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் விமானத்திற்குள் விமானிக்கும் துணை விமானியயான பெண்ணிற்கும் இடையில் கருத்துவேறுபாடு ஏற்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன் காரணமாக பயணிகள் பெரும் அசௌகரியத்தை எதிர்கொண்டுள்ளனர்.கருத்துவேறுபாடு காரணமாக இருவருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது. இதனை தொடர்ந்து விமானி துணை விமானியை விமானியறையிலிருந்து வெளியே தள்ளிபூட்டினார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

விமானம் பயணத்தை தொடர்ந்த போதிலும் இந்த சம்பவத்தை தொடர்ந்து விமானியறையின் செயற்பாடுகள் பயணிகள் பாதுகாப்பு குறித்து கேள்விகள் எழுந்துள்ளன.இந்த சம்பவம் குறித்த விசாரணைகளை தொடர்ந்து விமானி பணியிடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளார். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# கடற்தொழிலாளர்களின் குரலாக நாடாளுமன்றில் நாம் ஒலிப்போம்

## ஞானப்பிரகாசம் சுலக்சன் உறுதி




வடக்கு கடற்தொழிலாளர்கள் மற்றும் வடக்கில் வாழும் மலையக தமிழர்களின் வாழ்வாதாரங்களை உயர்த்தி , அவர்களின் குரலாக நாடாளுமன்றில் எங்கள் குரல்கள் ஒலிக்கும் என ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணியின் யாழ்.தேர்தல் மாவட்டத்தின் முதன்மை வேட்பாளர் ஞானப்பிரகாசம் சுலக்சன் தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணியின் சார்பில் கண்ணாடி சின்னத்தில் யாழ் . தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் அறிமுகம் ஞாயிற்றுக்கிழமை யாழில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் நடைபெற்றது.

நிகழ்வில் உரையாற்றும் போதே அவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில் –

கடற்தொழிலாளர்களின் வாழ்வாதாரங்கள் உயர்த்தப்பட வேண்டும். அதேபோன்று வடக்கில் வாழும் மலையக தமிழர்களின் வாழ்வாதாரங்களும் மேம்படுத்தப்பட வேண்டும்.

ஒவ்வொரு தேர்தல் காலங்களிலும் அரசியல் வாதிகள் எங்களை சந்திக்க வருவார்கள். எமது வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதாகவும், பிரச்சனைகளை தீர்த்து வைப்பதாகவும் வாக்குறுதிகளை வழங்கி செல்வார்கள். தேர்தல் முடிந்த பின்னர் அவர்கள் எங்களை கண்டு கொள்ள மாட்டார்கள்.

எனவே தான் எங்கள் கிராமங்களில், எங்கள் சமூகங்களில் நடக்கும் பிரச்சினைகளையும் நாடாளுமன்றில் நாமே எடுத்து சொல்ல வேண்டும் என்பதற்காவே நான் தேர்தலில் போட்டியிடுகிறேன் என மேலும் தெரிவித்தார்.

குறித்த நிகழ்வில் முற்போக்கு தமிழ் தேசிய கட்சியின் செயலாளர் சுதர்சிங் விஜயகாந்த் உரையாற்றுகையில் –

கடந்த ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாஸவிற்கு வேலை செய்தோம். அதன் போது அவர்களுடன் எமது உடன்படிக்கை அவர்களின் கூட்டணி கட்சியில் யாழ்ப்பாணத்தில் எமக்கு ஓர் ஆசனம் தர வேண்டும் என்பது. அதன் அடிப்படையிலேயே அவருக்காக நாம் உழைத்தோம்.

எம்மை ஏமாற்றி சமத்துவ மக்கள் கட்சியினருக்கு ஆசனங்களை வழங்கியுள்ளனர். அரசியல் சூழ்ச்சியால் எமக்கு ஆசனம் வழங்கப்படவில்லை. அதனால் தான் நாம் ஐக்கிய சுதந்திர முன்னணியின் கூட்டணியில் இணைந்தோம். இக் கூட்டணியிலும் எமக்கு ஒரு தேசிய பட்டியல் கேட்டு இருக்கிறோம்.

பாட்டாளி மக்கள் மற்றும் கடற்தொழில் மக்கள் பிரதிநிதித்துவத்தை நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் பெறுவோம்.

சஜித் தரப்பினர் பாட்டாளிகளான எம்மை ஏமாற்றி விட்டனர். எமக்குத் துரோகம் இழைத்து விட்டனர்.

நாம் இந்த தேர்தலில் ஒரு ஆசனத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கை உண்டு. உழைக்கும் பாட்டாளி மக்களின் எதிர்காலத்திற்காக நாம் நாடாளுமன்றம் செல்ல வேண்டும் என மேலும் தெரிவித்தார்.(05)

# ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்ட உதவி செயலர் அநுரவைச் சந்தித்தார்



ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் உதவிச்செயலாளர் நாயகம் கன்னி விக்னராஜா திங்கட்கிழமை முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை சந்தித்தார்.

ஆட்சி நிர்வாகம், அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் மற்றும் தேர்தல் முறைமை என்பன தொடர்பில் இதன் போது முக்கியமாக கவனம் செலுத்தப்பட்டது. 'பல் பரிமாண அபாய சூழ்நிலைகளைப் புரிந்துகொள்வது மற்றும் இலங்கை மக்கள் மீதான அவற்றின் தாக்கம்' என்ற தலைப்பில் தயாரிக்கப்பட்ட அறிக்கையும் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தின் பிரதிநிதியினால் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு கையளிக்கப்பட்டது.



இந்த அறிக்கையின் அடிப்படையில் இலங்கையின் அபிவிருத்தி முயற்சிகளுக்கு ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி வேலைத்திட்டம் பூரண ஆதரவை வழங்கும் எனவும் பிரதிநிதி உறுதியளித்தார்.

நாட்டின் பொருளாதாரத்தில் பெண்களின் பங்களிப்பு குறைவாக இருப்பது குறித்தும் இந்த சந்திப்பில் விசேடமாக கவனம் செலுத்தப்பட்டது. பொருளாதார நடவடிக்கைகளில் கிராமப்புற பெண்களின் பங்களிப்பை மட்டுப்படுத்தியிருப்பது நிதித் துறையில் குறிப்பிடத்தக்க சவால்களுக்கு வழிவகுத்துள்ளது என்று ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டம் சுட்டிக்காட்டியது. மேலும், தேசியப் பொருளாதாரத்தில் விவசாயத் துறை குறைந்த பிரதிநிதித்துவத்தைக் காட்டுவதும் இதற்கு காரணமாகிறது.

ஆசிய வலயத்தில் உள்ள ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையில் விவசாய உற்பத்தித் திறன் மோசமான நிலையில் காணப்படுவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது. விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடும் பெரும்பாலான விவசாயிகள் சிறிய அளவிலான நிலப்பரப்பைக் கொண்டுள்ளதாகவும் பெரும்பாலான விவசாயிகள் விவசாயத்தை தமது பிரதான வருமான வழியாக கருதவில்லை எனவும் ஜனாதிபதி எடுத்துக்காட்டினார் . இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக, பேரம் பேசும் சக்தி மற்றும் விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்த உதவியாக உள்ள விவசாய சங்கங்களை வலுப்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் டிஜிற்றல் மயமாக்கல் வேலைத்திட்டத்தை வெற்றியடையச்செய்வதற்கு ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தின் ஆதரவை வழங்க விருப்பம் தெரிவித்த உதவிச் செயலாளர் நாயகம், ஊழலைக் குறைப்பதில் முக்கிய கருவியாக டிஜிற்றல் மயமாக்கலைப் பயன்படுத்த முடியும் என்றும் சுட்டிக்காட்டினார்.

தேர்தல் முறைமை சீர்திருத்தங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டதுடன், அனைத்து இன மற்றும் மத சமூகங்களையும் உள்ளடக்கிய பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் வகையில் இவ்வாறான சீர்திருத்தங்கள் அமையும் என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க குறிப்பிட்டார்.

நுண்கடன் துறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டதுடன், அத்துறையின் வட்டி விகிதங்கள் நியாயமாக இல்லை எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். அதிக பெண்களை உள்வாங்குவதன் மூலம் நுண்நிதித் துறைக்கு ஆதரவளிக்கும் வகையில் புதிய அபிவிருத்தி வங்கியொன்றை ஸ்தாபிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும், மூலதனத்தைப் பாதுகாப்பதற்காக பெண் தொழில்முயற்சியாளர்கள் முன்வைக்கும் சிறந்த முன்மொழிவுகளுக்கு திறைசேரி உத்தரவாதங்களை வழங்குவதற்கும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

புதிய அரசாங்க சீர்திருத்தங்கள், ஊழலுக்கு எதிரான முயற்சிகள் மற்றும் பொருளாதாரம் மற்றும் பாராளுமன்றம் இரண்டிலும் பெண்களின் பங்களிப்பை அதிகரிப்பதற்கு ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தின் உறுதிப்பாடு இந்த சந்திப்பின் போது மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது.

இக்கலந்துரையாடலில் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி அசுசா குபோடா, மூலோபாய ஈடுபாடு, டிஜிற்றல் மற்றும் புத்தாக்கக் குழுவின் தலைவர் பாதில் பாக்கீர் மாக்கார் ஆகியோரும் கலந்துகொண்டனர்.(05)

# குளவிக் கொட்டுக்கு இலக்காகி 39 பாடசாலை மாணவர் காயம்

## குருணாகலில் சம்பவம்

குருணாகல், வாரியப்பொல பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் குளவி கொட்டுக்கு இலக்காகி 39 மாணவர்கள் காயமடைந்துள்ளனர்.

இந்த சம்பவம் திங்கட்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

பாடசாலையில் உள்ள பாரிய குளவி கூடு ஒன்று கலைந்ததால் இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக பாடசாலையின் அதிபர் தெரிவித்துள்ளார்.

12 வயதுக்கு உட்பட்ட மாணவர்களே இவ்வாறு காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த மாணவர்கள் வாரியப்பொல பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்த மாணவர்களின் உடல் நிலைமை கவலைக்கிடமாக இல்லை என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.(05)

# கல்கிசை பொலிஸ் பிரிவில் 34 வயது நபர் குத்திக்கொலை

கல்கிசை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட படோவிட்ட பிரதேசத்தில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார் என கல்கிசை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

கல்கிசை , படோவிட்ட பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடைய நபரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

கொலை செய்யப்பட்டவருக்கும் மற்றுமொரு நபருக்கும் இடையில் ஏற்பட்ட தனிப்பட்ட தகராறு காரணமாக இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

தாக்குதலில் காயமடைந்தவர் களுபோவில வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரை கைது செய்வது தொடர்பில் கல்கிசை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# கல்லால் தாக்கப்பட்டு ஒருவர் படு கொலை

## சந்தேகநபர் கைது

மாதம்பே பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சுதுவெல்ல பிரதேசத்தில் கல்லால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேக நபரொருவர் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் என மாதம்பே பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த கொலை சம்பவம் கடந்த 13 ஆம் திகதி காலை இடம்பெற்றுள்ளது.

மாதம்பே, சுதுவெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடைய நபரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் மாதம்பே, சுதுவெல்ல பிரதேசத்தில் வசிக்கும் 51 வயதுடையவர் ஆவார்.

முன்விரோதம் காரணமாக இந்த கொலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மாதம்பே பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# மட்டக்களப்பில் விபத்து ஒரு இறப்பு: இரு காயம்

*மட்டக்களப்பு கல்முனை பிரதான சாலையில் ஒந்தாச்சிமடம் பகுதியில் மோட்டார்சைக்கிளும் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் இருவர் காயமடைந்துள்ளனர்.*

*மோட்டார் சைக்கிளின் பின் பகுதியில் அமர்ந்து பயணித்த வெல்லாவெளி 39 ஆம் கொலனியைச் சேர்ந்த 16வயதான வனுசன் என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.*

*மோட்டார்சைக்கிளை செலுத்திச் சென்ற பெரியபோரதீவை சேர்ந்த இளைஞன் பலத்த காயமடைந்துள்ளார்எனவும் தெரிவிக்கப்படுவதுடன் சைக்கிளில் பயணித்த ஒந்தாச்சிமடத்தை சேர்ந்த சிறுவனுக்கு சிறு காயம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.*

*காயமடைந்தவர்கள் களுவாஞ்சிகுடி ஆதாரவைத்தியசாலையில் மேலதிக சிகிச்சைகளுக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிகுடி பொலிஸார் முன்னெடுத்து செல்கின்றனர். (05)*

காலைக்கதிர்
Kalaikkathir

# உலக முடிவு பள்ளத்தாக்கில் கீழே தள்ளிவீழ்த்தி கொலை

## சந்தேகநபர்கள் இருவர் கைது

ஹாலிஎல ரொஸட் கீழ் பிரிவைச்சேர்ந்த23வயதுடைய இளைஞரை மடூல்சீமை எலமான் சிறிய உலக முடிவு பகுதியில்உள்ளபள்ளத்தாக்கில் கீழேதள்ளி கொலை செய்ததாக சந்தேகிக்கப்படும் இருவரை கைதுசெய்துள்ளதாகமடூல்சீமை பொலிஸார் தெரிவித்தனர்.

31,39வயதுடையமடூல்சீமை பட்டவத்த பகுதியை சேர்ந்த இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த மாதம் 30 ம் திகதி இரவு ஹாலிஎல ரொஸட் கீழ் பிரிவைச் சேர்ந்த விவேகானந்தன் சுஜீவன் எனும் இளைஞன் திருமண வீடொன்றிற்கு செல்வதாகவும் வருவதற்கு 5 நாள்கள் ஆகும் என தனது சகோதரியிடம் கூறிவிட்டு விவிஎன்கே 9465 எனும் இலக்கம் கொண்ட தனது ஓட்டோ சென்றுள்ளார்.

இருப்பினும் 5 நாள்கள் கடந்தும் தனது மகனது கையடக்க தொலைபேசிக்கு அழைப்பைஏற்படுத்தியபோது கையடக்கத் தொலைபேசி செயலில் இல்லாததால் 5 நாள்கள் கடந்தும் தனது மகன் இதுவரையில் வராததாலும் சந்தேகம் கொண்ட குறித்த இளைஞனின் பெற்றோர் ஹாலிஎல பொலிஸ் நிலையத்தில் கடந்த 6 ஆம் திகதி முறைப்பாடு செய்துள்ளனர்.

பெற்றோரால் செய்யப்பட்ட முறைப்பாட்டிற்கு அமைய ஹாலிஎல பொலிஸார் பல கோணங்களில்விசாரணைகளை முன்னெடுத்தனர்.

குறித்த ஓட்டோ சுஜீவனுக்கு செந்தமானதாக இருந்தாலும் அதன் முன்னாள் உரிமையாளரின் பெயரிலேயே சுஜீவன் (லீஸிங்) தவணை கட்டணத்தை செலுத்தி வந்திருந்தமை தெரியவந்துள்ளது.

பின்னர் முன்னாள் உரிமையாளரை ஹாலிஎல பொலிஸ் நிலையத்திற்கு வரவழைத்து குறித்த நபரிடம் விசாரணைகளை மேற்கொண்ட போது சுஜீவனிடம் 480000 ரூபா பணத்தை கொடுத்து முன்னாள் உரிமையாளர் ஓட்டோவை பெற்று கொண்டதாகவும்

பின்னர் குறித்த ஓட்டோவின் முன்னாள் உரிமையாளரான மடூல்சீமைபட்டவத்தபகுதியை நபர் பணம் கொடுக்கும் கையடக்க தொலைபேசியில் பிடிக்கப்பட்ட புகைப்படத்தை பொலிஸாரிடம் காட்டியதாகவும் மேலும் தன்னிடம் ஓட்டோ கொடுத்துவிட்டு பணத்தை பெற்றுக் கொண்டு தான் ஒரு பெண்ணுடன் போவதாகவும் சுஜிவன் எழுதிய கடிதம் ஒன்றை பொலிஸாரிடம் காட்டியுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இதன்போது குறித்த நபர் மீது சந்தேகம் கொண்ட பொலிஸார் திங்கட்கிழமை மாலை ஓட்டோவின் முன்னாள் உரிமையாளரை கைது செய்து விசாரணைகளை மேற்கொண்ட போது பல திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

முன்னாள் ஓட்டோவின் உரிமையாளரின் சங்க நண்பர் ஒருவர் தனக்கு பணம் கொஞ்சம் தேவைப்படுவதாகவும் பணம் இருந்தால் தருமாறு தன்னிடம் கோரினார் எனவும் தன்னிடம் பணம் இல்லை என சக நண்பரிடம் கூறிய போது நண்பன் நீ விற்பனை செய்த

ஓட்டோ இன்னமும் உனது பெயரில் தானே உள்ளது. எனவே லீஸிங் முறையில் மேலதிகமாக பணம் எடுக்க முடியும் எனவே நீ ஓட்டோஷ் விற்பனை செய்த நபரிடம் கேட்டுப்பார் என கூறியதாக குறித்த நபர் பொலிஸாரிடம் கூறியுள்ளார்.

பின்னர்தானும்ஹாலிஎலரொஸட்பகுதியில் உள்ள சுஜிவனிடம் தங்களுக்கு பணம் சற்று அவசரமாக தேவைப்படுகிறது எனவும் லீஸிங் முறையில் மேலும் பணம் கொஞ்சம் பெற்று தருமாறும்தாங்கள்லீஸிங்பணத்தைகட்டுவதாக கூறியதை தொடர்ந்து அதற்கு சுஜீவன் மறுப்பு தெரிவித்துள்ளதாகவும் அதன் பின்னர் தங்களுக்கு மலசலகூடத்திற்கூட கழிவுகுழி வெட்டும்போது தங்களுக்கு மாணிக்கக் கற்களும் மேலும் சில விலைமதிப்பற்ற பொருள்கள் கிடைத்தன எனவும் அதே பிட்டமாறுவ பகுதியில் மறைத்து வைத்திருப்பதாகவும் அதை எடுத்து விற்பனை செய்வதற்கு 5 நாள்களுக்கு மேல் செல்லும் எனவும் ஓட்டோவை எடுத்துக் கொண்டு வருமாறும் குறித்த பொருள்களை விற்பனை செய்ததன் பின்னர் மூவரும் பணத்தை பிரித்து எடுத்துக் கொள்வோம் என ஆசை காட்டியே சுஜிவனை வரவழைத்ததாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பின்னர் வரவழைக்கப்பட்டு மடூல்சீமை எலமான் சிறிய உலக முடிவு பகுதிக்கு கூட்டிச் சென்று அங்கு வைத்து தானும் தனது நண்பனும் இணைந்து சுஜிவனை தாக்கினர் எனவும் தாக்கும் போது கீழே விழுந்த சுஜீவன் மூச்சுப்பேச்சு இன்றி காணப்பட்டார் எனவும் பின்னர் இறந்திருக்கலாம் என்ற சந்தேகத்தில் பள்ளத்தாக்கின் கீழே தூக்கி எறிந்துள்ளதாக சந்தேக நபர் பொலிஸாரிடம் கூறியதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பின்னர் குறித்த நபரின் சக நண்பரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போதுஉடன்மடூல்சீமைஎலமான்சிறிய உலக முடிவு பகுதிக்கு விரைந்த பொலிஸார் சுஜீவனைவீசியதாககூறப்படும்பள்ளத்தாக்கில் நேற்று காலை முதல் தேடுதலை மேற்கொண்ட போதிலும் சீரற்ற காலநிலையின் காரணமாக உடலைகண்டுபிடிக்கமுடியாமல்போனதாகவும் எனவே இன்று இராணுவத்தினரின் உதவியுடன் மீண்டும் தேடுலை மேற்கொள்ள உள்ளதாக மடூல்சீமை பொலிஸ் நிலையத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பதுளை பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் சுஜித் வெதமுல்ல மற்றும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் கந்தேவத்த ஆகியோரின் ஆலோசனையின் பேரில் மடூல்சீமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(05)




காலைக்கதிர் Kalaikkathir

# வெளிநாடுகளில் களவாக முதலிடப்பட்ட பணத்தை மீட்க சட்டங்கள் இயற்றப்படும்

## தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் தெரிவிப்பு

முன்னைய ஆட்சியாளர்கள் உகாண்டாவிலும் உலகின் ஏனைய பகுதிகளிலும் முதலீடு செய்துள்ளது என்பதை நாங்கள் அறிவோம்.கறுப்பு பணம் சட்டவிரோதபணபரிமாற்றத்திற்கு உட்படுத்தப்பட்ட சம்பவங்களும் உள்ளன.

எங்களுடையஅரசாங்கத்தின்போதுகளவாடப்பட்ட சொத்துக்களை பணத்தை மீட்பதற்கான சட்டங்களை இயற்றவுள்ளோம்.எனதேசியமக்கள்முன்னணியின் வேட்பாளரும் சட்டத்தரணியுமான நிலாந்தி கொட்டஹச்சி தெரிவித்துள்ளார்

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

உகாண்டாவிலும்நாட்டின்ஏனையபகுதிகளிலும் மறைத்துவைக்கப்பட்டிருக்கின்ற சட்டவிரோதமாக பெறப்பட்ட உழைக்கப்பட்ட பணத்தை மீட்கவேண்டி பரந்துபட்ட சூழமைவின் அடிப்படையிலேயே உகாண்டாவில் உள்ள களவாடப்பட்ட சொத்துக்கள் குறித்துநான்குற்றச்சாட்டுகளைமுன்வைத்திருந்தேன்.

நான் தெரிவித்தமைக்காக நான் முழுப்பொறுப்பையும் ஏற்கின்றேன்.

நான் தெரிவித்த சில கருத்துக்களிற்காக எனக்கு எதிராக அவதூறு பிரச்சாரத்தை முன்னெடுக்கின்றனர்.எனக்கு உகாண்டா குமாரி மெனிக்கே என பட்டப்பெயர் சூட்டியுள்ளனர்.

ஜனாதிபதி தேர்தல் காலத்தில் நான் ஆற்றிய உரைகளின் போது சட்டமொழுங்கு நீதியை நிலைநாட்டுவது குறித்தும்,தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட்ட அனுரகுமாரதிசநாயக்கவினால் அதனையே செய்ய முடியும் என்பதையும் நான் குறிப்பிட்டிருந்தேன்.

எங்களுடைய முழுமையான திட்டத்தில் களவாடப்பட்ட சொத்துக்களை மீட்பதற்கான அமைப்பொன்றைஏற்படுத்தஉறுதியளித்திருந்தோம்.

அபிவிருத்தியடைந்த நாடுகளில் அவ்வாறான சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக அவ்வாறான அமைப்புகள் உள்ளன.

பொதுமக்களின் வரிப்பணத்தை துஸ்பிரயோகம் செய்து அதனை வெளிநாட்டில் முதலீடு செய்திருந்தால் அதனை மீட்பதற்கான கட்டமைப்புகள் உள்ளன.

என்னுடைய அந்த உரையின் போது உகாண்டாவில் பதுக்கிவைக்கப்பட்டுள்ள பணத்தை மீட்கவேண்டியதன் அவசியம் குறித்து நான் குறிப்பிட்டிருந்தேன்.

நான் அந்த உரையை ஆற்றியவேளை பணம் அச்சிடும் டிலாரூ நிறுவனம் இலங்கையில் அச்சடித்த பணத்தின் ஒரு பகுதியை உகாண்டாவிற்கு அனுப்பியது என்பதை நான் அறிந்திருந்தேன், என்னுடைய கருத்து பேசுபொருளாக மாறியது.

முன்னைய அரசாங்கம் உகாண்டாவிலும் உலகின் ஏனைய பகுதிகளிலும் முதலீடு செய்துள்ளது என்பதை நாங்கள் அறிவோம்.கறுப்பு பணம் சட்டவிரோதபணபரிமாற்றத்திற்கு உட்படுத்தப்பட்ட சம்பவங்களும் உள்ளன.

எங்களுடைய அரசாங்கத்தின் போது களவாடப்பட்டசொத்துக்களைபணத்தைமீட்பதற்கான சட்டங்களை இயற்றவுள்ளோம்.தேசிய மக்கள் முன்னணி அரசாங்கமாகயிருந்தாலும் சரி எந்த அரசாங்கமாகயிருந்தாலும்சரிபொதுமக்களின்பணம் துஸ்பிரயோகம் செய்யப்படுகின்றமைக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டியது அரசாங்கத்தின் கடமை.

நான் தெரிவித்த விடயங்களிற்கு நான் முழுமையாக பொறுப்பேற்கி;ன்றேன்.

உகாண்டாவாகயிருந்தாலும்சரிஎங்கிருந்தாலும்; சரி நாங்கள் அதனை கையாளும் பொறுப்பை ஏற்போம்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவிற்கு நான் தெரிவித்த விடயத்தினை கேள்விக்குட்படுத்துவதற்கான அதற்கு எதிராக சவால் விடுவதற்கான அனைத்து உரிமையும் உள்ளது நாங்கள் அவருக்கு பொருத்தமான தருணத்தில் பதிலளிப்போம். - என்றார்.

(05)

# மசாஜ் நிலையம் என்ற போர்வையில் இயங்கிய விபச்சார விடுதி முற்றுகை

## கல்கிஸையில் இருவர் கைது

கல்கிசை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் மசாஜ் நிலையம் என்ற போர்வையில் இயங்கி வந்த விபச்சார விடுதி ஒன்றிலிருந்து இரண்டு பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்; என கல்கிசை பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினர் தெரிவித்தனர்.

கல்கிசை பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாத்தளைமற்றும்லுனுகம்வெஹெர ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 24 மற்றும் 31வயதுடைய இருபெண்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து, கைது செய்யப் பட்ட சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைகளுக்காககல்கிசைபொலிஸ் நிலையத்தில்ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்கிசை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

# டெங்கு நோய் பரவும் அபாயம் சுகாதார அமைச்சு எச்சரிக்கை



நாட்டில் தற்போது நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக டெங்கு நோய் பரவும் அபாயம் காணப்படுவதாக சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

நாட்டில் இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 40,657 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் சமூக சுகாதார வைத்தியர் அனோஜா தீரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், இவ்வருடத்தில் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டவர்களில் 20 பேர் உயிரிழந்துள்ளனர் என வைத்தியர் அனோஜா தீரசிங்க தெரிவித்துள்ளார்.

மேலும்,கொழும்பு,கம்பஹாமற்றும் களுத்துறை , கண்டி, இரத்தினபுரி, மாத்தறை, காலி மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களில் டெங்கு நோய் பரவும் அபாயம் காணப்படுவதாகவும் வைத்தியர் அனோஜா தீரசிங்க தெரிவித்துள்ளார்.(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.10.2024இல் வெளியிடப்பெற்றது